Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+IV

விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 21ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 22 (06.11.2004) சனிக்கிழமை இதழ்: 37

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038
(சி/2485)

# இலங்கைக்கான விஜயத்தின்போது திருப்பம் ஏற்படச் சாத்தியமில்லை!

## நோர்வே வெளியுறவு அமைச்சர் பீற்றர்சன்



(ஒஸ்லோ)

இலங்கையில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தை விரைவில் மீள ஆரம்பமாகும் என்பதற்கான எந்தவொரு எதிர்பார்ப்பும் தன்னிடம் இல்லையென நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

அண்மைய சில வாரங்களாக இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவுள்ள இரண்டு தரப்புக்களிடமிருந்தும் பெறப்பட்ட சமிக்ஞைகளிலிருந்து தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன் ஆரம்பிக்கப்படுமென நான் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் பிரச்சினையான நேரத்தில் இரண்டு தரப்புக்களுடனும் தொடர்புகளை வைத்திருப்பதென்பது மிக மிக முக்கியமானதென நான் கருதுகிறேன்.

அத்துடன் எனது இலங்கை விஜயம் வழமையான தொன்றுதான். எனது இந்த விஜயத்தின்போது யுத்தநிறுத்த உடன்படிக்கையை இருதரப்பினரும் எவ்வாறு பேணுவார்கள் என்பதுடன் அதனை எவ்வாறு முன்னேற்றுவது மற்றும் இதன்மூலம் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாகவே அமையும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் வரும் புதன்கிழமை கொழும்புக்கு வருகைதருவதுடன் அன்றைய தினம் ஜனாதிபதி சந்திரிகா உட்பட அரசியல் தலைவர்கள் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

மறுநாள் வியாழக்கிழமை கிளிநொச்சி வரும் அவர் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு புதிய காவலரண்களும் அமைப்பு!

(கொழும்பு)

படையினர் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்குபவர்கள் அண்மைக்காலமாக கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து கொழும்பு நகரில் பாதுகாப்பில் ஈடுபடும் பொலிஸாரின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் காவலரண்களும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவகையில் இன்று முதல் சுமார் ஆயிரம் பொலிஸார் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் இவர்கள் கொழும்பின் முக்கிய சந்திகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் கொழும்பின் மத்திய பகுதியின் முக்கிய இடங்களில் பத்துத் தொடக்கம் 12 பேர் வரையிலான பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவர் எனவும் இது முன்னைய காலங்களைவிட இரண்டு மடங்கு அதிகமானதெனவும் தகவல்கள் தெரிவித்தன.

# சமாதான முன்னெடுப்புக்களில் நம்பிக்கை அதிகரித்துள்ளதாம்!

## புதுடெல்கி கருத்தரங்கில் ஜனாதிபதி சந்திரிகா

(புதுடெல்கி)

இலங்கையின் சமீபகால நிகழ்வுகளை வைத்துப் பார்க்கும்போது - தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கை தனக்கு அதி

கத் தென்னாசியாவை ஒன்றாக வைத்திருத்தல்' என்ற தலைப்பில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பிரச்சினையில் இதுதான் நீண்ட நாள் போர்நிறுத்தமாகும். இதன் மூலம் சமாதான நடவடிக்கைகள் முன்னேறி நகர்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளமுடியும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு

(கொழும்பு)

படையினர் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்குபவர்கள் அண்மைக்காலமாக கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து கொழும்பு நகரில் பாதுகாப்பில் ஈடுபடும் பொலிஸாரின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் காவலரண்களும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவகையில் இன்று முதல் சுமார் ஆயிரம் பொலிஸார் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் இவர்கள் கொழும்பின் முக்கிய சந்திகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் கொழும்பின் மத்திய பகுதியின் முக்கிய இடங்களில் பத்துத் தொடக்கம் 12 பேர் வரையிலான பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவர் எனவும் இது முன்னைய காலங்களைவிட இரண்டு மடங்கு அதிகமானதெனவும் தகவல்கள் தெரிவித்தன.

ஆயுதக் கலாசாரமுள்ள மக்களுக்கு எமது இந்த நடவடிக்கை மூலம் நல்ல பாடம் புகட்டுவோம். இதிலும் குறிப்பாக முன்னைநாள் இராணுவ உளவாளிகளைக் கொல்லும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டு சரியான நடவடிக்கை எடுக்கப்படும். ஏனெனில் இந்தக் கொலைகள் நீண்டுகொண்டே செல்கின்றதென கொழும்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்..

## புதுடெல்கி கருத்தரங்கில் ஜனாதிபதி சந்திரிகா

(புதுடெல்கி)

இலங்கையின் சமீபகால நிகழ்வுகளை வைத்துப் பார்க்கும்போது - தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கை தனக்கு அதிகரித்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்று இந்தியாவின் 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகையின் சார்பில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில்- 'வேற்றுமையில் ஒற்றுமையாகத் தென்னாசியாவை ஒன்றாக வைத்திருத்தல்' என்ற தலைப்பில் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். -

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமாதானப் பேச்சுக்களுக்கு அதிகபட்ச நெகிழ்வுப்போக்கைக் கடைப்பிடிக்க எண்ணியுள்ளேன். விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த மூன்று வருடங்களாக நீடித்துவருகிறது.

இருபதாண்டு இலங்கை இனப் பிரச்சினையில் இதுதான் நீண்ட நாள் போர்நிறுத்தமாகும். இதன் மூலம் சமாதான நடவடிக்கைகள் முன்னேறி நகர்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளமுடியும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கு தொடர்ந்தும் முயற்சிசெய்து வருகின்றேன். இந்த விடயத்தில் எனக்கு நம்பிக்கை அதிகரித்துள்ளது. இதற்குமேல் இதுபற்றி மேல் விபரங்களைத் தெரிவிக்கமுடியாது என்றார்.

## குளிக்கச் சென்றவர் குளத்தில் மூழ்கி மரணம்!

புலோலி - முறாவில் குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் பரிதாபகரமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

மந்திகை துறையா மூலையைச் சேர்ந்த ராஜரட்ணம் ஜெயதாஸ் (வயது - 26) என்பவரே குளத்தில் மூழ்கி உயிரிழந்தவராவார்.

நண்பர்களுடன் நீந்துவதற்காகச் சென்றபோதே இவர் நீரிழ் மூழ்கி உயிரிழந்தார். நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பருத்தித்துறை பதில் நீதவான் ந.தங்கராசா மரணவிசாரணையை மேற்கொண்டார். உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனபது குறிப்பிடத்தக்கது. சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (14)



கடந்த புதன்கிழமை யாழ்.குடாநாட்டுக்கு இரகசிய விஜயம் மேற்கொண்டிருந்த வட- கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தன பலாலி விமானத்தளத்தில் வந்திறங்கியபோது....!

## அடுத்த இரு நாட்களுக்கு மழை வீழ்ச்சி தொடரும்!

### வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வங்காள விரிகுடாவில் தோன்றியிருக்கும் தாழமுக்கம் காரணமாக அடுத்த இரண்டு நாட்களுக்கு யாழ். குடாநாட்டில் மழை பெய்யும் சாத்தியம் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் கரையோரப் பகுதிகளில் அதிக மழை பெய்யக்கூடும் என்றும், இடையிடையே பலத்த காற்று வீசும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று நண்பகலுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் யாழ். குடாநாட்டில் 57 மி.மீ மழை பெய்ததாக யாழ். திருநெல்வேலி வானிலை அவதான நிலையத் தரவுகள் தெரிவித்தன.

கடந்த வாரத்தில் மட்டும் குடாநாட்டில் 168 மி.மீ மழைவீழ்ச்சி பதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார்
வானவெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

## கலாசார நிகழ்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் இன்றும், நாளையும் நடாத்தவிருந்த கலாசார நிகழ்வு கால நிலை சீரின்மையால் பிற்போடப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# சைவப்பெருவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடாத்தும் சைவப் பெருவிழாவும், பரிசளிப்பு வைபவமும் இன்று காலை 8 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - இந்து கலாசார அமைச்சின் யாழ்.மாவட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் சிவ.மகாலிங்கம், ஸ்கந்தவரோதயா கல்லூரியின் உபஅதிபர் ஆறுதிருமுருகன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு முன்னதாக உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம் பெற்றுப் பின்னர் - ஆலயத்திலிருந்து திருமுறைச் சுவடிகளுடன் ஊர்வலம் ஆரம்பித்து விழா மண்டபத்தினை சென்றடைந்ததும் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

## அனுமதிப்பத்திரம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானையைச் சேர்ந்த எஸ். சுதாகரன் என்பவரின் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் கண்டெடுக்கப்பட்டு நல்லூர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (63)

## கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான ஒக்ரோபர் மாத சம்பளக்கொடுப்பனவுகள் இன்று காலை 10 மணிக்கு கல்லூரியில் வழங்கப்படும்.

அன்றைய தினம் சகல உள்ளகப் பயிற்சி முகிழ்நிலை ஆசிரியர்களையும் கல்லூரிக்குச் சமுகமளித்து கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு பீடாதிபதி அறிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சமூக சேவைகள் திணைக்களத்தினர் நடாத்தும் சிறுவர்கள் பாதுகாப்பு பராமரிப்பு தொடர்பான கருத்தரங்கு பிரதேச மட்டங்களில் நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கான அமர்வு நேற்று நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 12 ஆம் திகதி சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு நடைபெறும் என்று நல்லூர் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர். (63)

## யாழ்.மாவட்டத்தில் கலாசார மண்டபம் நிர்மாணித்தல் - கேள்வி அறிவித்தல்

நேற்றைய (05.11.2004) நாளேட்டில் பிரசுரமாகிய யாழ்ப்பாண மாவட்டத்தில் கலாசார மண்டபம் அமைத்தல் தொடர்பான கேள்வி அறிவித்தலில் வேலை விபரம் பற்றிய அட்டவணை பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

| வேலை விபரம் | ஆகக்குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புத் தொகை | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை |
|---|---|---|---|
| யாழ். மாவட்டத்தில் கலாசார மண்டபம் ஒன்று நிர்மாணித்தல் | M4 | 312,000/- | 750/- |

## யாழ். மாவட்டத்தில்

சர்வதேச மாணவர் பேரவை,
தமிழர் மாணவர் ஒன்றியம் - யாழ் மாவட்ட வலயக் கல்வி பணிமனைகளின் இணைந்த ஆதரவுடன்

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் ~ கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்

### க.பொ.த (சா/த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை (பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும் யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இலவசமாக நடாத்தவுள்ளது.

### யாழ். மாவட்டத்திற்கான கருத்தரங்கு நிலையங்கள்

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தென்மராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி.
02. யா/ வரணி மகாவித்தியாலயம்.
03. யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
04. யா/ மட்டுவில் மகாவித்தியாலயம்
05. யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வடமராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/ உடுத்துறை மகாவித்தியாலயம்.
02. யா/ மருதங்கேணி இ.த.க.பாடசாலை.
03. யா/ குடத்தனை அ.த.க.பாடசாலை.
04. யா/ ஹாட்லிக் கல்லூரி
05. யா/ மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
06. யா/ வட இந்து மகளிர் கல்லூரி.
07. யா/ வேலாயுதம் மகாவித்தியாலயம்.
08. யா/ தும்பளை சிவப்பிரகாச மகாவித்தி.
09. யா/ புற்றளை மகாவித்தியாலயம்.
10. யா/ வல்வை சிவகுரு வித்தியாலயம்.
11. யா/ கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.
12. யா/ ஞானாசாரியார் கல்லூரி.
13. யா/ விக்னேஸ்வராக் கல்லூரி.
14. யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
15. யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
16. யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
17. யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வலிகாமம் வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/ இராமனாதன் கல்லூரி.
02. யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
03. யா/ உடுவில் மகளிர் கல்லூரி.
04. யா/ அருணோதயாக் கல்லூரி.
05. யா/ யூனியன் கல்லூரி.
06. யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்.
07. யா/ விக்ரோறியாக் கல்லூரி.
08. யா/ வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
09. யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி.
10. யா/ மானிப்பாய் மெமோறியல்.
11. யா/ இளவாலை சென் கென்றியரசர் கல்லூரி.
12. யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.
13. யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தீவக வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா∴ சரஸ்வதி வித்தியாலயம்.
02. யா∴ சேர் வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்.
03. யா/ புங்குடுதீவு மகாவித்தியாலயம்.
04. யா/ ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ்.
05. யா/ நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
06. யா/ காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- யாழ். வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/ அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம்.
02. யா/ நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்.
03. யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி.
04. யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
05. யா/ சோமாஸ்கந்தாக் கல்லூரி.
06. யா/ கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.
07. யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.
08. யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்.
09. யா/ வேம்படி மகளிர் கல்லூரி.
10. யா/ மத்திய கல்லூரி.
11. யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்.
12. யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி.
13. யா/ சென் பற்றிக்ஸ் கல்லூரி.
14. யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
15. யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
16. யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி.
17. யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்.
18. யா/ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.
19. யா/ இந்து மகளிர் கல்லூரி.
20. யா/ இந்துக் கல்லூரி.
21. யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பாடசாலை பரீட்சாத்திகளும் தனிப்பட்ட பரீட்சாத்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம்**

### யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளர் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

கொமர்ஷல் வங்கி உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SICS கணினி சேவைகள் இல.125A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில்

Global Info IDM (PVT) LTD.. JAFFNA CENTER IDM

IIS 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2831

S.T.P 73, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம 302, கே.கே.எஸ் வீத', யாழ்ப்பாணம்.

UNIT 347, K.K.S. Road, Jaffna

Softview Computer College 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna

### கிளிநொச்சி மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
13.11.2004 (ஆங்கிலம்)

01. பூநகரி - பூநகரி மகாவித்தியாலயம்
02. முழங்காவில் - முழங்காவில் மகாவித்தியாலயம்
03. ஜெயபுரம - ஜெயபுரம் அ.த.க. பர்டசாலை
04. பளை - பளை மத்திய கல்லூரி
05. தருமபுரம் - தருமபுரம் மகா வித்தியாலயம்
06. முரசுமோட்டை - முருகானந்தா மகா வித்தியாலயம்
07. வட்டக்கச்சி - வட்டக்கச்சி மகாவித்தியாலயம்
08. இராமநாதபுரம் - இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
09. அக்கராயன - அக்கராயன் மகா வித்தியாலயம்
10. இரணைமடு - கனகாம்பிகைக் குளம் அ.த.க.பாடசாலை
12. கனகபுரம் - கனகபுரம் மகா வித்தியாலயம்
12. உருத்திரபுரம் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி
13. கிளிநொச்சி நகர் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்
14. கிளிநொச்சி நகர் - கிளிநொச்சி மத்திய கல்லூரி
15. விசுவமடு -பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

# அரசியல் யாப்புக்கு அமைவாகவே அரசியலமைப்பை மாற்றவேண்டும்

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டும் ஆனால், அது அரசியல் யாப்புக்கு அமைவாகவே இடம்பெற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் போராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

அரசியல் யாப்பு இடைக்கிடையே மாற்றப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். இதனை மேற்கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை ஒன்றுள்ளது. இந்தமுறை அரசியல் சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. இதற்கு மாறாக அரசியல் யாப்பில் மாற்றம் கொண்டு வரப்பட்டால், அது சட்டங்களுக்குப் புறம்பான நடவடிக்கையாகும். சட்ட விரோதமாக அரசியல் யாப்பை மாற்றி அமைக்க நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லை.

அரசாங்கம் எதிர்வரும் காலத்தில் சமர்ப்பிக்கப்போகும் வரவு - செலவுத் திட்டத்தை மக்கள் எதிர்பார்த்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை- அரசாங்கம் மூன்று மாத காலத்துக்குள் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கப்போவதாகக் கூறிய போதிலும், தற்சமயம் அதை மூன்று கட்டங்களாக வழங்கப்போவதாகக் கூறுவது ஏற்றுக்கொள்ளமுடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின்



பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

# மீண்டுமொரு தேர்தல் நடந்தால் ஹெல உறுமய போட்டியிடமுடியாது

(கொழும்பு)

மீண்டுமொரு பொதுத்தேர்தல் இடம்பெறுமாயின், ஜாதிக ஹெல உறுமய அந்தத் தேர்தலில் போட்டியிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தக் கட்சியின் செயலாளர் பதவிக்காக இருவருடைய பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் ஜாதிக ஹெல உறுமயவில் உட்கட்சி முரண்பாடுகள் காணப்படுவது தெளிவாகியுள்ளது.

இதனையடுத்து, இந்தக் கட்சியை முரண்பாடுகளுடைய கட்சியாக பிரகடனப்படுத்துவதற்கு, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தீர்மானித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் பதவிக்கு, சிஹல உறுமயவின் உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் பெயரும், கொடபொல அமரகீர்த்தி தேரரின் பெயரும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே இந்தக் கட்சி, உட்கட்சி முரண்பாடுகளைக் கொண்ட கட்சிகளுடன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் செயலக வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கான உயர் மட்டக்குழுவின் கூட்டமொன்று, விரைவில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சுபி முஸ்லிம்களுக்கு எதிராக காத்தான்குடியில் அச்சுறுத்தல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் சுபி முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் "மஜ்லிஷுஸ்ஷுறா" என்ற அமைப்பால் பிரசுரமொன்று வெளியிடப்பட்டு நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டது.

எமது ஊரில் கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஈமானுக்கு எதிரான சக்திகளுககெதிரான போராட்டம் தொடரும்.

ஈமானுக்கு எதிரான சக்திகள் தமது 'அத்வைத' கொள்கையைக் கைவிட்டு முழுமையாக இஸ்லாத்தில் இணைய வேண்டும்.

'அத்வைத' சக்திகள் தொடர்ந்தும் தமது கொள்கையிலிருந்து தூய இஸ்லாத்தில் இணைந்து கொள்ளத் தவறும் பட்சத்தில் பல்வேறு நெருக்கடிகளையும், இழப்புகளையும் எதிர்நோக்க வேண்டிவரும்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை வர்த்தகர்கள் தங்கள் வியாபார நிலையங்களை மூடி, இந்தப் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என அந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட சுபி முஸ்லிம்களான அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவை, இந்தப் பிரசுரம் ஜமி அத்துல் உலமா சபை, இஸ்லாமிய வழிகாட்டல் நிலையம் ஆகியவற்றின் பின்னணியில் வெளியிடப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

## இராணுவ உளவாளி

# மூன்றாவது தவணையின்போதும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை

பொலனறுவை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ உளவாளியொருவர் நேற்றுமுன்தினம் மூன்றாவது தவணையின் போதும் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.

சுப்பிரமணியம் யோகநாதன் (கொல்லப்பட்ட புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நிதியின் தம்பி) என்ற இந்த நபர் - கடந்த ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி மட்டக்களப்பு புதுநகரில் வைத்து கைக்குண்டுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பாதுகாப்பின் நிமித்தம் பொலன்னறுவைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவின் பேரில், இரண்டு வாரங்களுக்கொரு தடவை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டிய இவர், நேற்று முன்தினம் தவணையின்போது மூன்றாவது தடவையாகவும் ஆஜர்படுத்தப்படவில்லை. பாதுகாப்பு காரணங்களுக்காக இவரை அழைத்துவர முடியாதிருப்பதாக சிறைச்சாலை அத்தியட்சகர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையையடுத்து, எதிர்வரும் 18 ஆம் திகதி இவரை ஆஜர்படுத்துமாறு நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் உத்தரவிட்டார்.

# அரசின் அபிவிருத்தி திட்டங்களுக்கு ஜப்பான் அரசாங்கம் ஒத்துழைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கப் போவதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

இதன்படி கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காக 2600 கோடி ரூபாவுக்கு அதிகமான தொகையை பெற்றுத்தர ஜப்பான் இணக்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நிதி அமைச்சில் அமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்தித்தபோது, இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சுடா இந்த உறுதிமொழி பற்றி அறிவித்தார். கடன் பொதி மூன்று திட்டங்களைக் கொண்டது. சிறிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தாது, சீரிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வது, கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பது என்பனவாகும்.

ஜப்பான் வழங்கும் குறைந்த வட்டியிலான கடன்தொகையை 40 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுதத வேண்டும்.

# பெருமளவான வெளிநாட்டு தபால் பொதிகள் ரயில் நிலையப் பற்றைக்குள் இருந்து மீட்பு

## மோசடித் தகவல்கள் வெளியாகின

கொழும்பு, பிரதம அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தின் வெளிநாட்டு அஞ்சல் பிரிவுக்குரிய 16 அஞ் சல் பொதிகள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்குப் பின்புறமுள்ள பற்றைகளுக்குள் இருந்து நேற்று முன்தினம் மீட்கப்பட்டன.

கோட்டைப் ரயில் நிலைய துப்பரவுப் பணியாளர் குழுவால் இந்த அஞ்சல் பொதிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இது குறித்து அவர்கள் உடனடியாக மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்துக்கு அறிவித்தவுடன், அங்கிருந்த பொதிகள் மீட்கப்பட்டு, மத்திய தபால் நிலையத்துக்கும், கோட்டைப் ரயில் நிலையத்துக்கும் குறுக்கேயிருந்த சுவரினூடாக மீண்டும் மத்திய அஞ்சல் நிலைய வளவுக்குள்ளேயே போடப்பட்டிருந்தன.

பரதம தபாலகம தற்போது கோட்டை ரயில் நிலையத்துக் குப் பின்புறமாகவுள்ள மெத்தல் வீதியில் அமைத்திருப்பது குறிப்பிடப்பட்டது. இந்த வெளிநாட்டுப் பொதி மோசடிகளைச் சம்பந்தப்பட்ட தபால் திணைக்கள ஊழியர்களால் காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுக் கடிதங்களை உடைத்து அவற்றுள் இருக்கும் காசோலைகள் மற்றும் பெறுமதியான பொருட்களை மோசடிசெய்து வந்ததாக மத்திய அஞ்சல் நிலையத்தில் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறு மோசடி செய்யப்படும் வெளிநாட்டுப் பொதிகளில், பெருமளவானவை லண்டனிலிருந்து அனுப்பப்பட்டவை எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட ஒரு தபால் பொதியினுள் சுமார் 600 கடிதங்கள் இருந்தன. இவற்றுக்குள் புகைப் படங்கள், கடிதங்கள், வாழ்த்து மடல்கள் ஆகியன அடங்கியிருந்தமை இங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும், சுமார் 600 இற்கும் அதிகமான வெளிநாட்டுக் கடிதங்கள் உடைக்கப்பட்டு, அவற்றுள்ளிருந்த பெறுமதியான பொருட்கள் திருட்டப்பட்டதாகவும், இதனோடு குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களுக்குத் தொடர்புகள் இருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டுப் பொதிகளைக் களஞ்சியப்படுத்தும் அறையினுள் இருந்த பாதுகாப்பு வலைகள் வெட்டப்பட்டு, கடிதப் பொதிகள் களவாடப்பட்டுள்ளன. இது குறித்து அஞ்சல் அதிபர் நாயகம் சேனாவீர கருத்துத் தெரிவிக்கையில் -

இது போன்று முன்னரும் பெரிய அளவிலான மோசடிகள் இடம்பெற்றுள்ளமையை நான் ஒப்புக்கொள்கிறேன். இது குறித்து பொலிஸாருக்கும் தெரியப்படுத்தினேன்.

தற்போது உடைக்கப்பட்டுள்ள தபால் பொதிகளின் விபரங்களைப் பட்டியற்படுத்துகிறோம். அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து, அதனுடன் தொடர்புபட்டோரைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கவுள்ளோம் எனக் கூறிய அவர், இது குறித்து அதிகமான விபரங்களை ஊடகத்துக்குத் தெரியப்படுத்த விரும்பவில்லை எனவும் கூறினார். (தே)

### துயர் வெல்லும் துணை இசைத்தட்டு வெளியீட்டு விழா

கவிஞர் புதுவை இரத்தின துரையின் - உயிர் வருடும் வரிகளில் தமிழக இசையமைப்பாளர் இலக்கியனின் மெய்யுருகும் இசையில், தமிழக பிரபல பின்னணிப் பாடகர்களின் குரலில் உருவான "துயர் வெல்லும் துணை" பாடல் இசைத்தட்டு வெளியீட்டுவிழா நல்லார் துர்க்கா மணிமண்டபத்தில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

# 21 ஆயிரம் சமுர்த்தி அலுவலர்களுக்கு நவம்பர் 21 இல் நிரந்தர நியமனம்

நாடு முழுவதிலுமுள்ள 21 ஆயிரம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன் தனது சேவையில் நிரந்தரமாக்கப்படவுள்ளனனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று 10 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இவ்வாறு நிரந்தரமாக்கும் விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை எதிர்வரும் 12 ஆம் திகதியளவில் அமுல்படுத்துமாறு சமுர்த்தி அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இதற்கெனத் திறைசேரி 10 கோடி 3 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதனால், சமுர்த்தி அலுவலர்களின் சம்பள உயர்ச்சியும் பூர்த்தியாக்கப்படவுள்ளது. கடந்த பல வருடங்களாகப் பிரஸ்தாப சமுர்த்தி அலுவலர்கள் 21 ஆயிரம் பேரும் சேவையில் நிரந்தரமாக்கப்படாமலிருப்பது குறிப்பிடத்தக்கது.

# வாகனங்களை ஒப்படைக்குமாறு புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவு

வடக்கு - கிழக்குப் பகுதிகளில், படைத்தரப்பின் புலனாய்வுப் பிரிவினரின் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டுவரும் வாகனங்களை மீளக் கையளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, புலனாய்வுப் பிரிவினரின் நடவடிக்கைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இந்த உத்தரவு இராணுவத் தலைமையகத்தால் விடுக்கப்பட்டுள்ளதாகவும், மாதாந்த வாடகைக் கொடுப்பனவின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த இந்த வாகனங்களை, உடனடியாக உரிய தரப்பினரிடம் கையளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத் தில் செயற்படும் இராணுவப் புலனாய்வுத் பிரிவினரிடம் இருந்த வாகனங்கள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட அதிகாரிகளின் கடமைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வடக்கு - கிழக்கு பகுதிகளில் கடமையில் ஈடுபட்டுள்ள புலனாய்வு அதிகாரிகளின் வாகனங்கள் இவ்வாறு மீளப்பெறப்பட்டுள்ளமை, பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் இராணுவ வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

# 13 ஓட்டங்களால் இந்தியா மும்பை டெஸ்ட்டில் வெற்றி



இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் மும்பையில் நேற்று முடிவடைந்த நான்காவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி யாரும் எதிர்பார்க்காத வகையில் 13 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணியைத் தோற்கடித்தது.

நேற்றுமுன்தினம் ஷேவாக் 4 ஓட்டங்களுடனும், கம்பீர் ஒரு ஓட்டத்துடனும் இருந்த நிலையில் நேற்றையதினம் தமது ஆட்டத்தைத் தொடங்கினர். இந்த நிலையில் மக்ரா தனது பந்துவீச்சை ஆரம்பித்தார். இவரது பந்துவீச்சில் கம்பீர் ஒரு ஓட்டத்துடனேயே கிளார்க்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதன் பின்னர் லக்ஷ்மன், ஷேவாக்குடன்



இணைந்தார். ஆனால், ஷேவாக்கையும், மக்ரா நிற்கவிடவில்லை. அவரும் 5 ஓட்டங்கள் பெற்றநிலையில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் சச்சின், லக்ஷ்மனுடன் இணைந்தார். இவர்கள் இருவரும் ஆரம்பத்தில் சற்றுத் தடுமாறினாலும் பின்னர் அவுஸ்ரேலியப் பந்துவீச்சாளர்களின் பந்துகளை நாலாபுறமும் துரத்தி அடித்தனர்.

இதில் இருவரும் மூன்றாவது விக்கெட் இணைப்பாட்டமாக 91 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் சச்சின் 83 பந்துகளில் ஒரு சிக்ஸர் 6 பவுண்டரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களைப் பெற்றநிலையில் கூரிச்சின் பந்துவீச்சில் கிளார்க்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் லக்ஷ்மனுடன் அணித் தலைவர் ராவிட் இணைந்தார். இருவரும் நிலைத்துநின்று ஆடியபோதும் லக்ஷ்மன் 127 பந்துகளில் 12 பவுண்டரிகள் அடங்கலாக 69 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கூரிச்சின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் பந்துவீச்சில் மாற்றத்தைச் செய்து கிளார்க்கைக் கொண்டுவந்தார். அவரது மாற்றத்திற்கேற்ப கிளார்க்கின் பந்துவீச்சில் இந்திய விக்கெட்டுக்கள் மளமளவெனச் சரிந்தன. இதில் முதலாவது விக்கெட் ராவிட் 27, கைவ் 4, ஹர்பஜன் ஓட்டமெதுவும் பெறாமலும், கார்த்திக் 2 , சகீர்கான் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். இறுதியில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது.


பந்துவீச்சில் மக்ரா, கூரிச் இருவரும் தலா 2, கிளார்க் சிறப்பாக 6.2 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன்பின் அவுஸ்ரேலிய அணிக்கு 107 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் அவ்வணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. ஆரம்ப



வீரர்களாகக் ஹைடனும், லாங்கரும் களமறங்கினர். இதில் சகீர்கானின் முதலாவது ஓவரின் இரண்டாவது பந்திலேயே லாங்கர் ஓட்டமெதுவும் பெறாமல் தினேஷ் கார்த்திக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் ஹைடனுடன் பொண்டிங் இணைந்தார். இவர் 15 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 12 ஓட்டங்களைப் பெற்றநிலையில் முரளி கார்த்திக்கின் பந்துவீச்சில் லக்ஷ்மனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து மார்ட்டின் வந்தார். அவரும் முரளி கார்த்திக்கிடன் அதே ஓவரின கடைசிப் பந்தில் ஓட்டமெதையும் பெறாமல் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் கட்ரிச் வந்தார். அவர் ஒரு ஓட்டத்தைப் பெற்றநிலையில் ஹர்பஜனின் பந்தில் ராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து ஹைடன் 24 ஓட்டங்க



ளைப் பெற்றநிலையில் ஹர்பஜனின் பந்தில் போல்டானார். அடுத்து கிளார்க் 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கார்த்திக்கின் பந்தில் போல்டானார்.

இதன்பின் கில்கிறிஸ்ட் 5, கூரிச் 15, கஸ்பரோவிச் 7, மக்ரா ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தனர். இறுதியில் அவுஸ்ரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களை எடுத்ததால் தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் ஹர்பஜன் 5, முரளி கார்த்திக் 3, சகீர்கான் மற்றும் கும்ளே இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரராக முரளி கார்த்திக்கும், தொடரின் சிறப்பாட்டக்காரராக டேமியன் மார்ட்டினும் தெரிவானார்கள்.




## வீரர்களை உற்சாகப்படுத்த பாரத் ஆர்மி அணி !

மும்பையில் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்திய வீரர்களை ஊக்கப்படுத்த நடன அழகிகள் குழு உருவாக்கப்பட்டிருந்தது. இங்கிலாந்தில் கிரிக்கெட் வீரர்களை உற்சாகப்படுத்தும் இதே போன்ற பெண்கள் குழுவுக்கு பார்மி ஆர்மி என்று பெயர்.

மும்பையிலும் இதுபோன்று இந்திய கிரிக்கெட் வீரர்களை உற்சாகப்படுத்த அழகிகள் அணி அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்த அணிக்கு பாரத் ஆர்மி என்று பெயர் சூட்டி இருக்கிறார்கள்.

இந்தக் குழுவில் ஆண்களும் பெண்களுமாக 75 பேர் இருக்கிறார்கள. இவர்கள் மும்பையில் நேற்று நடந்துமுடிந்த இந்தியா - அவுஸ்ரேலியா இடையேயான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது பங்கு கொண்டார்கள்.

ராவிட் 6 ரன், ஹர்பஜன் சிங் 4 ரன், அடித்தபோது இந்தப் பெண்கள் கைகளில் பூங்கொத்துக்களுடன் துள்ளிக்குதித்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

# நல்லூர் பிரதேச சபை 2005 ஆம் ஆண்டுக்கான

## கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றை 2005 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 2005 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கு கேள்விகள் 19-11-2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி வரை நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுடன் இரு பிரதிகளை செயலாளர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி. என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்தி பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் 17-11-2004 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை. கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1500000.00 இற்கும், ரூபா 200000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 28-11-2004 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொள்ளவேண்டும்.

குறிப்பு:

01. திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல:1, 11 கொக்குவில் உபஅலுவலக இறைச்சிக் கடைகள் ஆகியவற்றின் மூன்று மாத வாடகை ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் செலுத்தப்பட வேண்டும்.
02. சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் 3% இற்கு மேல் சந்தை வரி அறவிடக்கூடாது.
03. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 2/- இற்கும் மோட்டார் சைக்கிளுக்கும் ரூபா 3/- இற்கும் மேல் பாதுகாப்புக்கட்டணம் அறவிடக்கூடாது.
04. தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு புறம்பாக தொகையின் 15% வற் வரியாக செலுத்தப்படல் வேண்டும். மேற்படி தொகையும் விண்ணப்பப்படிவத்தில் காட்டப்படல் வேண்டும்.
05. கேள்விப்பத்திரத் தொகையுடன் அதற்குரிய 15% வற் வரி செலுத்தப்படல் வேண்டும்.
06. இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப்படிவம் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

### 2005 ஆம் ஆண்டுக்கான சந்தைகள் இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு விடுவதற்கான கணிப்பீடு

| சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| **நல்லூர் உப - அலுவலகம்** | | | |
| 01. திருநெல்வேலிச்சந்தை துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 1000.00 | 15000.00 | 4259970.00 |
| 02. திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல:1 | 500.00 | 5000.00 | 93500.00 |
| 03. திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல:11 | 500.00 | 5000.00 | 60500.00 |
| **கொக்குவில் உப - அலுவலகம்** | | | |
| 01. கொக்குவில் குளப்பிட்டிச்சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 1000.00 | 10000.00 | 193060.00 |
| 02. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 93500.00 |
| 03. கொக்குவில் உப - அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 138600.00 |
| 04. கொக்குவில் உப - அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 247500.00 |
| 05. கொக்குவில் உப - அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 71500.00 |
| 06. கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச்சந்தையும் மாட்டிறைச்சிக்கடையும் | 500.00 | 5000.00 | 58300.00 |
| 07. கொக்குவில் உப - அலுவலக 329, பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 5000.00 | 86460.00 |
| 08. கோண்டாவில் வடக்கு அரசடி வீதி, மீன்சந்தை. | 200.00 | 500.00 | 1000.00 |

அரசடி வீதி, மீன் சந்தைக்கு விண்ணப்பப்படிவம் கோருபவர் அதற்குரிய இடத்தை தெரிவு செய்து காணி உரிமையாளரின் சம்மதக்கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**திரு.பொன்னையா வைரமுத்து,**
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
04.11.2004

(சி -3326)




(தொடரும்....)

# ஏணியும் மாறனும்










(தொடரும்....)

றனும்



இங்கே மடிக்கவும்

# சிறுவர்அரங்கம்

# துருவன்



என் அன்புக்குரிய சிறுவர்களுக்கு

ஆச்சரியம். மகிழ்ச்சி. இவை இரண்டும் கலந்து ஒவ்வொரு பக்கங்களாகப் பார்க் கின்றீர்களா?

ஆம் சிறுவர்களே! சிறுவர் அரங்கம் உங்களுக்கென்றே மெரு கூட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு வண்ணம். பக்கங் களின் எண்ணிக்கை அதிகரிப்பு. புதிய விடயங்கள் என இந்தப் பக்கங்கள் உங்கள் கைகளில் தவழ்கின்றது.

ஆச்சரியம், மகிழ்ச்சி. இவற்றுடன் இன்னும் ஒன்றைக் கவனித் தீர்களா?

சிறுவர் அரங்கம் துருவன் என்ற பெயர் தாங்கி வெளிவந்துள்ளது.

எதற்காக துருவன் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

உங்களுக்குள் கேள்வி எழுகின்றதா?

துருவித் துருவி ஆராய்கின்றீர்களா?

இவ்வாறு நீங்கள் பலப்பல விடயங்களைத் துருவித் துருவி ஆராய வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பல துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும். அதற்கான ஆர்வத்தைத் தூண்டி விடவே துருவன் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. பெயருக்கேற்றவாறே பல்துறை சார் விடயங்கள் வெளிவரும்.

ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் உங்களுக்கு ஞாபகப்படுத் துகின்றேன். சிறுவர் பக்கம் உங்கள் பக்கம். இந்தப் பக்கத்தை நீங்கள் வாசித்தால் மட்டும் போதாது. வாசித்து விட்டு உங்கள் அபிப்பிராயங்கள் சொந்தக் கற்பனையில் உதித்த கட்டுரைகள், கவிதைகள் போன்ற ஆக்கங்களையும் அனுப்புங்கள். மேலும் நீங்கள் வேறு புத்தகங்களில் வாசித்து ரசித்தவைகளை, பயன்பெற்றவைகளையும் அனுப்புங்கள். ஏனைய சிறுவர்களும் வாசித்து ரசித்து பயனடைவார்கள். அது எல்லோருக்கும் நல்லது தானே!

இப்போது நீங்கள் ஆண்டிறுதிப் பரீட்சை ஆயத்தங்களில் இருப்பீர்கள். புதிய வகுப்புக்குச் செல்லப் போகின்றீர்கள். எனவே கேள்விகளை ஆறுதலாக, கவன மாக வாசித்து விடையளியுங்கள். பரீட்சைகளில் சிறந்த புள்ளிகள் எடுக்க அனை வருக்கும் வாழ்த்துக்கள்.

-பாசத்துடன் சாரு அக்கா-

## எனக்குப் பிடித்த நாய்க்குட்டி

தெருவில் நின்ற நாய்க்குட்டி
தாயைப் பிரிந்த நாய்க்குட்டி
சின்னக் குட்டி என்றதால்
பேதலித்த நாய்க் குட்டி

ஆரும் அணைக்க வில்லையே
அன்பு காட்ட வில்லையே
பேரும் வைக்க வில்லையே
பின்னே என்னைத் தொடருதே

சுட்டியதை வீட்டிலே
கட்டி வளர்க்கப் போகிறேன்
பாலும் சோறும் தந்து நான்
ஊட்டி வளர்க்கப் போகிறேன்



-கிருபா-

06-11-2004
நமது ஈழநாடு - சனிக்கிழமை

# அதிசயம் - ஆனால் உண்மை



### சோடியத்தின் எரியும் தன்மை

சோடியம் என்ற இரசாயனப் பொருளை தண்ணீரில் போட்டு. அதனருகில் எரியும் தீக்குச்சியைக் கொண்டுபோனால் அந்தக் கலவை உடனே தீப்பிடிக்கும். ஆனால், சோடியத்தை மண்ணெண்ணெய் பாத்திரத்தில் போட்டு இதே சோதனையை மேற்கொண்டால், அந்தக் கலவை தீப்பிடிப்பதில்லை.

### கண்ணாடி ஒரு திரவம்.

திடப்பொருள் போல் உறுதியாக இருந்தாலும், கண்ணாடி ஒரு திரவம். பல துகள்கள் ஒன்று சேர்ந்து கண்ணாடியாகிறது. அந்தக் துகள்களை ஒரு நிலையில் நிறுத்தி வைத்தால் அவை கீழ் நோக்கி ஓடும் தன்மை உடையவை.

### நீர் ஆவியாதல்

ஏறக்குறைய ஆயிரத்தில் மூன்று பங்கு தண்ணீர் உலகின் மேற்பரப்பிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஆவியாகிறது.

### எலியும் திமிங்கிலமும்


திமிங்கிலத்தின் எடை நூறு தொன்னுக்கு மேல் இருக்கும். எலியின் எடை சில அவுன்ஸ்கள் ஆகும். ஆனாலும் ஏறக்குறைய ஒரே அளவுள்ள முட்டையிலிருந்துதான் ஒரு பிராணிகளுமே வளர்ந்து பெரிதாகின்றன.

### 72 தசைகள்

ஒவ்வொரு வார்த்தைகளைக் கதைப்பதற்கும் நாங்கள் 72 தசைகளையும் பயன்படுத்த வேண்டியுள்ளது.

# அறிவுத் துளிகள்

* யானையின் தும்பிக்கையில் எலும்புகள் கிடையாது.
* ஆமைகள் 300 ஆண்டுகள் கூட உயிர் வாழும்.
* சிங்கத்தின் ஆயுட்காலம் 15 ஆண்டுகள்.




* பாம்பின் உமிழ்நீரே அதன் விசமாக மாறுகிறது.
* வண்ணத்துப் பூச்சி காலால் தான் ருசியை அறிகிறது.
* சீன மொழியில் பேசும் முறை வேறு, எழுதும் முறை வேறு.

கு. மணிமாறன்
ஹாட்லிக் கல்லூரி

# எனது பாடசாலை

எனது பாடசாலை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நெடுந்தீவு என்னும் கிராமத்தில் உள்ளது. எனது பாடசாலையின் பெயர் நெடுந்தீவு மகா வித்தியாலயம். எனது பாடசாலையில் 450 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். 1 தொடக்கம் 13 வரையான வகுப்புக்கள் உள்ளன. எனது பாடசாலையில் 17 ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள். நான் 6ஆம் தரத்தில் படிக்கிறேன். எனது வகுப்பில் 39 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்.



ஸ்ரீ. மோன் சுதர்சன்
நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
தரம் - 06.


# பொது அறிவு

1. உலகிலே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு - ஸ்பெயின்.
2. மிகக்குறைந்த வார்த்தைகள் கொண்ட மொழி - இத்தாலியன் மொழி
3. அடிப்பட்டால் மனிதனைப்போல் அழும் பிராணி - கரடி.
4. பற்கள் இல்லாத உயிரினம் - இலையான்.

J. டனுவினி, ஆண்டு 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

# ஓவியம் வரைந்து பழகுவோம்

என்னால் பென்சிலைப் பிடித்து ஒரு நேர்கோடு வரைய முடியவில்லையே என்று யோசிக்கிறீர்களா? தாள் ஒன்றில் தரப்படும் வடிவங்களை வரைந்து பழகுங்கள். ஆர்வமும், தொடர்ச்சியான பயிற்சியின் மூலமும் ஓவியராகி விடுவீர்கள். ஆரம்பத்தில் வட்டம், நீள்வட்டம், சதுரம், செவ்வகம், முக்கோணம் போன்றவற்றை அடிக்கடி வரைந்து பழகிக் கொள்ளுங்கள்.




இங்கே மடிக்கவும்

# இன்ஸ்பெக்டர் இளை...

## துப்பறியும்

இன்ஸ்பெக்டர் இளையதம்பியுடன் ஒரு அறிமுகம் -
இன்ஸ்பெக்டர் இளையதம்பி ஐம்பது வயது நிரம்பிய...



அளவில்லாத பாசமும் மரியாதையும் கொண் டவர். நல்லம்... யாருடன் பழகி, அவ ரது அன்பைப் பெறாத வர்கள் எவரும் உரும் பிராய்க் கிராமத்திலே இல்லை.

இளையதம்பி நல்லம்மையார் தம் பதிகளுக்கு அருமை யான இரண்டு பிள்ளைகள். பெரியவள் பெயர் முல்லை. முல்லை விவசாயத் துறையிலே ...ரேலிய நாட் டிலே நல்ல பதவி வகிக்கிறாள். இளையவன் ... இந்துக் கல்லூரியிலே உயர் தர மாணவன். தந்தையா... பிற்காலத்தில் காவல் துறையில் நல்லதொரு பதவி வ... இலட்சியத்தைக் கொண்டவன்.

இனி கலைவாணி நகைக்கடையிலிருந்து காணாமற்போ... பிடித்து அதன் உரிமையாளரும் தனது அருமை நண்பருமான ... அவர்களுக்கு இன்ஸ்பெக்டர் இளையதம்பி உதவிய சாகசத்...

### தொலைபேசி அழைப்பு

காலை பத்துமணி பொலிஸ் நிலையத்தில் கடமையா... முக்கியமான சில ஃபைல்களை புரட்டிப் பார்த்துக் கொண்டிரு... தொலைபேசிமணி ஒலித்தது. பார்த்துக் கொண்டிருந்த ஃபைல்... தொலைபேசியை எடுத்தார். கலோ இன்ஸ்பெக்டர் இளை... முடியுமா? என்றதொரு குரல் அந்தப் பக்கத்திலிருந்து ஒலித்...

நான் இளையதம்பிதான் பேசுகிறேன் நீங்கள் யாரென்று ... என்று இளையதம்பி கேட்டார். இளையதம்பி நான் முத்துவே... உடனடியாக வெளிக்கிட்டு கடைக்கு வரவேண்டும். எனக்கு ... சேர்ந்துள்ளது என்று முத்துவேலு பதற்றத்தோடு சொன்னார்.

பதற்றப்படாது நடந்தது என்னவென்பதை நிதானமாகச்...



மேற்பரப்பிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஆவியாகிறது.

### எலியும் திமிங்கிலமும்

திமிங்கிலத்தின் எடை நூறு தொன்னுக்கு மேல் இருக்கும். எலியின் எடை சில அவுன்ஸ்கள் ஆகும். ஆனாலும் ஏறக்குறைய ஒரே அளவுள்ள முட்டையிலிருந்துதான் ஒரு பிராணிகளுமே வளர்ந்து பெரிதாகின்றன.

### 72 தசைகள்

ஒவ்வொரு வார்த்தைகளைக் கதைப்பதற்கும் நாங்கள் 72 தசைகளையும் பயன்படுத்த வேண்டியுள்ளது.

றலை

ழ்ப்பாண
என் னும்
னது பாட
ந்தீவு மகா

வித்தியாலயம். எனது பாடசாலையில் 450 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். 1 தொடக்கம் 13 வரையான வகுப்புக்கள் உள்ளன. எனது பாடசாலையில் 17 ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள். நான் 6ஆம் தரத்தில் படிக்கிறேன். எனது வகுப்பில் 39 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள்.

*ஸ்ரீ. யோன் சுதர்சன்*
*நெடுந்தீவு மகாவித்தியாலயம்.*
*தரம் - 06.*


### பொது அறிவு

1. உலகிலே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு - ஸ்பெயின்.
2. மிகக்குறைந்த வார்த்தைகள் கொண்ட மொழி - இத்தாலியன் மொழி
3. அடிப்பட்டால் மனிதனைப்போல் அழும் பிராணி - கரடி.
4. பற்கள் இல்லாத உயிரினம் - இலையான்.

J. டனுவினி, ஆண்டு 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ல் பென்சிலைப் பிடித்து ஒரு நேர்கோடு வரைய
ில்லையே என்று யோசிக்கிறீர்களா? தாள்
தரப்படும் வடிவங்களை வரைந்து பழகுங்கள்.

ன்றவற்றை அடிக்கடி வரைந்து பழகிக் கொள்




இங்கே மடிக்கவும்



# இன்ஸ்பெக்டர் இளையதம்பி துப்பறியும்

# தொலைந்த வைரம்

இன்ஸ்பெக்டர் இளையதம்பியுடன் ஒரு அறிமுகம் -

இன்ஸ்பெக்டர் இளையதம்பி ஐம்பது வயது நிரம்பிய சுறுசுறுப்பானதொரு இளைஞர். காவல் துறையில் பணி புரிகின்றார். உரும்பிராய்க் கிராமத்தில் அவரை அறியாதவர்கள் என்று யாரும் இருக்கமாட்டார்கள். நீதியும் நேர்மையும் இளைய தம்பிக்கு இரு கண்கள். இரக்க குணத்திலே நிலவைப்போல குளிர்மையானவர். குற்றம் செய்பவர்களைத் தண்டிப்பதிலோ கதிரவனைப் போலக் கடுமையானவர்.



இளையதம்பியாரது மனைவியார் நல்லம்மையார் தான் கொண்ட பெயரைப் போலவே நல்ல மனம் கொண்ட அம்மையர் அவர். கணவர் மேல் அளவில்லாத பாசமும் மரியாதையும் கொண் டவர். நல்லம்மையாருடன் பழகி, அவ ரது அன்பைப் பெறாத வர்கள் எவரும் உரும் பிராய்க் கிராமத்திலே இல்லை.

இளையதம்பி நல்லம்மையார் தம் பதிகளுக்கு அருமை யான இரண்டு பிள்ளைகள். பெரியவள் பெண்பிள்ளை. பெயர் முல்லை. முல்லை விவசாயத் துறையிலே பட்டதாரி. அவுஸ்ரேலிய நாட் டிலே நல்ல பதவி வகிக்கிறாள். இளையவன் குகன். யாழ்ப்பாண இந்துக் கல்லூரியிலே உயர் தர மாணவன். தந்தையாரைப் போலவே தானும் பிற்காலத்தில் காவல் துறையில் நல்லதொரு பதவி வகிக்கவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டவன்.

இனி கலைவாணி நகைக்கடையிலிருந்து காணாமற்போன வைரத்தைக் கண்டு பிடித்து அதன் உரிமையாளரும் தனது அருமை நண்பருமான திருவாளர் முத்துவேலு அவர்களுக்கு இன்ஸ்பெக்டர் இளையதம்பி உதவிய சாகசத்தைப் பார்ப்போம்.

**தொலைபேசி அழைப்பு**

காலை பத்துமணி பொலிஸ் நிலையத்தில் கடமையாக இருந்த இளையதம்பி முக்கியமான சில ஃபைல்களை புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் தொலைபேசிமணி ஒலித்தது. பார்த்துக் கொண்டிருந்த ஃபைல்களை மூடி வைத்துவிட்டு தொலைபேசியை எடுத்தார். கலோ இன்ஸ்பெக்டர் இளையதம்பியுடன் நான் பேச முடியுமா? என்றதொரு குரல் அந்தப் பக்கத்திலிருந்து ஒலித்தது.

நான் இளையதம்பிதான் பேசுகிறேன் நீங்கள் யாரென்று தெரிந்து கொள்ளலாமா? என்று இளையதம்பி கேட்டார். இளையதம்பி நான் முத்துவேலு பேசுகிறேன். நீங்கள் உடனடியாக வெளிக்கிட்டு கடைக்கு வரவேண்டும். எனக்கு பெரியதொரு கஸ்டம் வந்து சேர்ந்துள்ளது என்று முத்துவேலு பதற்றத்தோடு சொன்னார்.

பதற்றப்படாது நடந்தது என்னவென்பதை நிதானமாகச் சொல்லுங்கள் மிஸ்டர் முத்துவேலு என்று இளையதம்பி முத்துவேலுவை அமைதிப்படுத்தினார். காட்சி அலுமாரியினுள்ளிருந்த வைரப் பெட்டியிலிருந்து வைரம் ஒன்று காணாது போய்விட்டது இன்ஸ்பெக்டர். ஐந்து இலட்சங்கள் மதிப்புக் கொண்டது அந்த வைரம் என்று கவலையோடு சொன்னார் முத்துவேலு. சரி முத்துவேலு நான் இப்போதே வெளிக்கிட்டு கடைக்கு வருகிறேன் அதுவரை கடையிலிருந்து எவரும் வெளியே போகாது பார்த்துக்கொள்ளுங்கள் என்று இளையதம்பி சொன்னார்.

**முத்துவேலு**

கலைவாணி நகைக் கடையின் உரிமையாளர் திருவாளர் முத்துவேலு கன்னத்திலே கைவைத்துக் கவலையோடு அமர்ந்திருந்தார். கடையில் வேலை செய்பவர்கள் அவரைச் சுற்றிலும் வாடிப்போன முகங்களோடு கூடி நின்றிருந்தார்கள். முத்துவேலு நகை வியா பாரத்திலே நல்ல இராசியானவர் என்றும் நேர்மையானவர் என்றும் பெயர் பெற்றவர். தந்தையார் மயில்வாகனத்தாருக்குப் பிறகு கடந்த பத்து வருடங்களாக நகை வியாபாரம் செய்துவரும் முத்துவேலுவின் கடையில் முன்னர் எப்போதும் இப்படியானதொரு அசம்பாவிதம் நடந்ததில்லை.

முத்துவேலுவின் கடையில் ஆறு பேர் வேலைசெய்து வருகிறார்கள். அவர்களில் இருவர் நகைக் கடையில் விற்பனை உதவியாளர்களாகவும் நால்வர் கடையின் பின்புறம் அமைந்திருக்கும் பட்டறையில் நகை வேலை செய்பவர்களாயுமிருந்தார்கள். அவர்கள் ஆறு பேருமே இன்றைக்கு நேற்றல்ல மயில்வானத்தாரின் காலத்திலிருந்து கலைவாணி நகைக் கடையில் வேலை செய்பவர்கள். முத்துவேலுவின் நம்பிக்கைக்குப் பாத்திர மானவர்கள். அவர்களைச் சந்தேகிப்பதில் அர்த்தமில்லை என்று முத்துவேலு நினைத்தார்.

எந்தவிதமான சந்தேகங்களுக்கும் இடம் கொடுத்திடாது நகைக் கடை வேலையாளர்கள் அறுவரும் தாமாகவே முன்வந்து ஒருவரை யொருவர் நன்றாகச் சோதனையிட்டும் பார்த்து விட்டார்கள். நகைக் கடையின் மூலை முடுக்கெல்லாம் தேடிப் பார்த் தாயிற்று பிரயோசனமில்லை.


**நகைக்கடையிலே இளையதம்பி**

பத்து நிமிடப் பயணத்தின் பின்னர் இளையதம்பியின் ஜீப்வண்டி நகைக்கடைத் தெருவை வந்தடைந்தது. பொலிஸ் ஜீப்பின் வருகையால் கடைத் தெருவில் பரப்பை ஏற்படுத்தவோ முத்து வேலுவின் கஷ்டத்தை வெளியே விளம்பரம் செய்யவோ இளையதம்பி விரும்பவில்லை ஆதலால் தூரமாக தெரு முனையில் ஜீப்பை நிறுத்துமாறு டிரைவரிடம் சொல்லி அங்கேயே இறங்கி நடந்து கலை வாணி நகைக்கடைக்கு வந்தார்.





இளைய தம்பி யைக் கண்டதும் முத்து வேலுவின் மனதில் இருந்த சுமையில் பாதி குறைந்தது போலாயிற்று. ஒரு பொலிஸ்கார ராக மட்டுமல் லாது நல்ல தொரு நண்பராகவும் இளைய தம்பியை வெகு நாட்களாக முத்துவேல் அறி வார். தேவையான நகை கள் அனைத்தையும் நல்ல அம்மையார் கலை வாணி நகைக்கடையில் தான் வாங்குவார். பத்து நாட்களில் மினுக்கம் போய் தங்க நகைகள் பித்தளை நகைகளாக மாறும் அபாயத்தை விலை கொடுத்து வாங்கு வதற்கு நல்லம்மையார் விரும்புவதில்லை. வாருங்கள் இளையதம்பி அமருங்கள் என்று இளைய தம்பியை அமருங்கள் என்று இளையதம்பியை அன்போடு வரவேற்று அமரச்செய்தார் முத்துவேலு. அருகில் நின்ற வேலையாளர்களில் ஒ[illegible]வரிடம் தம்பி சூடாக இரண்டு கோப்பை தேனீர் எடுத்து வாருங்கள் ஒன்றில் சீனி குறைவாயிருக்கட்டும் என்று சொல்லி விட்டு இளைய தம்பியைப் பார்த்துச் சிரித்தார். இளையதம்பி இனிப்பு அதிகம் சாப்பிடமாட்டார் என்பதை முத்துவேலு நன்கறிவார். (தொடரும்...)

தரப்பட்டுள்ள படத்தில் எந்த உயிரினம் வித்தியாசமானது?



நான்கு தேனீக்கள் தங்களுடைய தேன் கூட்டில் இருந்து வெளியே வந்தன பறந்து பறந்து பூக்களில் தேன் உண்டன. எந்தத் தேனி அதிகமான பூக்களில் தேன் உண்டது?




## மூளைக்கு வேலை

1. நான்காம் பின்னத்தின் மேல்வரும் எண் என்ன?

$\frac{3}{9}$ $\frac{5}{25}$ $\frac{7}{49}$ $\frac{?}{64}$

2. வரிசைத் தொடரை நிரப்ப எந்த எண் வேண்டும்?

6, 11, 21, 41, ...........?

மூளைக்கு வேலை சென்றவார விடைகள்

1. புத்தகமும் மிகுதியும் சேர்த்து ரூபா 40. ஆகவே புத்தகத்தின் விலை ரூபா 37.
40−3= 37

2. ரூபா 10 + ரூபா 2 = ரூபா 12
ஐஸ்கிரீமின் விலை ரூபா 12

## விளையாட்டு



விளையாட்டு என்பதை வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களமெனக் கூறலாம். விளையாட்டு என்றால் ஆட்டம், போட்டி விளையாட்டு, இன்பப்பொழுது போக்கு என்று வி[illegible]யும். விளையாட்டு எல்லோருக்கும் பிடிக்கும். எத்தனையோ வகையான விளையாட்டுக்கள் உள்ளன.

பொதுவாக விளையாட்டுக்களை உள்ளக விளையாட்டுக்கள் (indoor games) என்றும், களவிளையாட்டுக்கள் (outdoor games) என்றும் பிரிக்கப்படுகிறது.

ஆனாலும் விளையாட்டின் தன்மையைப் பொறுத்து விளையாட்டுக்கள் உடல் திறனைச் சார்ந்தது, அறிவுத் திறனைச் சார்ந்தது, வாய்ப்பு நிலை, மனமகிழ்ச்சி நிலை என்றும் பார்க்கலாம். விளையாட்டு என்றாலே கூடி விளையாடுவது தான்.

விளையாட்டின் மூலம் உடல் வளர்ச்சி, அறிவுத் திறன், கட்டுப்பாட்டுணர்வு, ஒற்றுமையுணர்வு, பொதுநல உணர்வு, தலைமைப்பண்பு, தலைமைக்குக் கட்டுப்படும் பண்பு, வெற்றி தோல்வியினைச் சமமாகக் கருதுதல், விட்டுக் கொடுக்கும் பண்பு, உதவி புரியும் மனப்பாங்கு, சமூக உணர்வு முதலியன ஏற்படுகின்றன.

கூடி விளையாடும் விளையாட்டுகளின் பொதுவான அம்சம் பொழுது போக்குத்தான் என்றாலும் பொழுது போக்கு உள்ளம் உடல் நலனுக்கு அவசியம் என்பதால் இந்த வகையான கூடி விளையாடும் விளையாட்டுக்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே நாள்தோறும் கூடி விளையாடி நன்மைகள் பெறுங்கள்.

இங்கே மடிக்கவும்



## முத்தமிழ் வித்தகர் சு...

ஈழத் திருநாட்டில் பிறந்த தமிழ்ப் பெரி...
விபுலானந்தராவார். கல்விக்கும் மொழிக்குப்...
தொண்டாற்றியுள்ளார்.

இவர் ஈழநாட்டின் கிழக்கு மாகாணத்தில்...
இருபத்தியெட்டு மைல் தொலைவில் அமை...
29-03-1892 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது த...
கண்ணம்மையார். சுவாமி விபுலானந்தரின் இ...

பெற்றார் மகிழ்ச்சி அடையும் வண்ணம் ...
கொண்டு தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத மொ...

பெரியவர்களைக் கனம் பண்ணுவதிலும்...
ஆசிரியர்களை மதித்தல், ஒழுங்குகளுக்குக்...
மயில்வாகனம் உயர்ந்து நின்றார். பாடசாலை...
பெரிதும் கவர்ந்து நல்மாணாக்கனாக விளங்கி...

பல நூல்களைக் கற்றார். விஞ்ஞானக் கல்...
தேர்ச்சி அடைந்தார். பாடசாலை ஒய்வு ...
கொண்டார்.


தான் கற்ற விஞ்ஞானவியலை தனது ...
செல்வங்களாயிருந்து மறைந்து வழக்கொழிந்...
யாழ் நூலை ஆக்கித் தந்தார்.

இந்த நூல் பழந் தமிழரின் இசை நுட்ப...
இப்பெருநூல் பண்டைத் தமிழரின் இசைக் ...
சகோடயாழ் என்பவற்றுள் முதல் நான்கினைப்...
யாழ் நூல் என்னும் பெயர் பெற்றது.

மொழிபெயர்ப்பு நூல்கள் இலக்கிய ஆய்...
அறிவியல், சமயம் உரைநடைகள் கவிதை நூ...

தமிழுக்கும் சமுதாயத்துக்கும் ஈழமண்ண...
முயற்சியால் முன்னேறிய மனிதர். இவரது வ...
மாணவர்களாகிய நீங்கள் முயற்சி உடையவ...

விண்ணில் நாம் காணும் நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலிய ...
என்றும் கூறுவர். நாம் வசிக்கும் பூமியும் இந்த கிரகங்களுள் ஒன்றான...
பொருட்களைப் பற்றிய பௌதீகம், இரசாயனம் முதலியவைகளும் ...




கூட்டங்களின் உருவங்களைக் கொண்டு இந்த மக்கள் இவற்றுக்குப் ...
புரானக்கதைகளிலும் பல்வேறு சமய நூல்களிலும் இவ்விண்பொரு...
போல ஆதிகால மக்களும் பூமி தட்டையானது என்றே நம்பினார்க...
இருபத்து நான்கு மணித்தியாலத்திற்கொருமுறை பூமியை வலம் வ...

பின்னர் கிரேக்க நாட்டு அறிஞர்களான கிறிஸ்துவுக்கு முன் 4 ...
ஆகியோர் பூமி தட்டையல்ல உருண்டை வடிவானது என்று ஆராய்ச்...

ஆனால், பூமி அண்டத்தின் மத்தியிலே அசையாமலிருந்ததென்...
இந்தக் கொள்கை தவறு என்பதை யார் கூறினார்கள் என்பதை ...

... தங்களுடைய தேன் கூட்டில் இருந்து வெளியே வந்தன
...க்களில் தேன் உண்டன. எந்தத் தேனி அதிகமான
...ண்டது?



...க்கள் (indoor games ) என்றும், களவிளை...
(outdoor games ) என்றும் பிரிக்கப்படுகிறது.
... விளையாட்டின் தன்மையைப் பொறுத்து
...க்கள் உடல் திறனைச் சார்ந்தது, அறிவுத்...
...ந்தது, வாய்ப்பு நிலை, மனமகிழ்ச்சி நிலை...
...க்கலாம். விளையாட்டு என்றாலே கூடி...
...து தான்.
...ட்டின் மூலம் உடல் வளர்ச்சி, அறிவுத்...
...ப்பாட்டுணர்வு, ஒற்றுமையுணர்வு, பொது...
... தலைமைப்பண்பு, தலைமைக்குக் கட்...
...பு, வெற்றி தோல்வியினைச் சரிசமமாகக்
...ட்டுக் கொடுக்கும் பண்பு, உதவி புரியும்
...கூக உணர்வு முதலியன ஏற்படுகின்றன.
...யாடும் விளையாட்டுகளின் பொதுவான...
... போக்குத்தான் என்றாலும் பொழுது போக்கு...
...ல் நலனுக்கு அவசியம் என்பதால் இந்த...
... விளையாடும் விளையாட்டுக்கள் மிக...
...ப் பெறுகின்றன. எனவே நாள்தோறும் கூடி...
...ன்மைகள் பெறுங்கள்.

இங்கே மடிக்கவும்

# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்



ஈழத் திருநாட்டில் பிறந்த தமிழ்ப் பெரியார்களில் ஒருவர் யாழ் நூல் தந்த சுவாமி விபுலானந்தராவார். கல்விக்கும் மொழிக்கும் சமயத்துக்கும் இசைக்கும் அவர் பெரும் தொண்டாற்றியுள்ளார்.

இவர் ஈழநாட்டின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகரத்தின் தென்திசையிலே இருபத்தியெட்டு மைல் தொலைவில் அமைந்திருக்கும் காரைதீவு என்னும் கிராமத்தில் **29-03-1892** ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி. தாயார் பெயர் கண்ணம்மையார். சுவாமி விபுலானந்தரின் இயற்பெயர் மயில்வாகனம்.

பெற்றார் மகிழ்ச்சி அடையும் வண்ணம் மிக நல்ல பிள்ளையாகத் திகழ்ந்தார். சிறுவயதில் கல்வியில் நாட்டம் கொண்டு தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளைக் கற்றார்.

பெரியவர்களைக் கனம் பண்ணுவதிலும் தாய் தந்தை சொற் கேட்பதிலும் பற்றுடையவராக விளங்கினார். ஆசிரியர்களை மதித்தல், ஒழுங்குகளுக்குக் கீழ்ப்படிதல், கடமையை உணர்ந்து செயற்படல் ஆகியவற்றில் மயில்வாகனம் உயர்ந்து நின்றார். பாடசாலையில் தனது ஒழுக்கத்தினாலும் நுண்ணறிவினாலும் ஆசிரியர்களைப் பெரிதும் கவர்ந்து நல்மாணாக்கனாக விளங்கினார்.

பல நூல்களைக் கற்றார். விஞ்ஞானக் கல்வியிலும் கணித நுட்ப அறிவிலும் நாட்டம் கொண்டு பரீட்சைகளில் தேர்ச்சி அடைந்தார். பாடசாலை ஒய்வு நேரங்களில் ஆசிரியர்களை நாடி, தெரியாத விடயங்களை அறிந்து கொண்டார்.

தான் கற்ற விஞ்ஞானவியலை தனது இசை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தி, பழந்தமிழர்களது இசைச் செல்வங்களாயிருந்து மறைந்து வழக்கொழிந்த யாழ் வகைகளை மீள உருவமைத்து இசை உலகிற்குப் புதுமெருகேற்ற யாழ் நூலை ஆக்கித் தந்தார்.


இந்த நூல் பழந் தமிழரின் இசை நுட்பங்களை ஆராய்ச்சி முறையாக விரித்துரைக்கும் ஒரு முதல் நூல். இப்பெருநூல் பண்டைத் தமிழரின் இசைக் கருவிகளாகிய வில்யாழ், பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ் , சகோடயாழ் என்பவற்றுள் முதல் நான்கினைப் பற்றிப் பொதுவாகவும் சகோடயாழ் பற்றிச் சிறப்பாகவும் கூறுவதால் யாழ் நூல் என்னும் பெயர் பெற்றது.

மொழிபெயர்ப்பு நூல்கள் இலக்கிய ஆய்வு ஒப்பியல் இசையாராய்ச்சி, மொழியியல், கல்விச் சிந்தனைகள், அறிவியல், சமயம் உரைநடைகள் கவிதை நூல்கள் கட்டுரைகள் என்று பலவற்றை எழுதினார்.

தமிழுக்கும் சமுதாயத்துக்கும் ஈழமண்ணில் தொண்டாற்றிய பேராசான் - வித்தகன் விபுலானந்தர். இவர் முயற்சியால் முன்னேறிய மனிதர். இவரது வாழ்க்கை வரலாறு நமது முன்னேற்றத்துக்கு உதவும் உந்து சக்தியாகும். மாணவர்களாகிய நீங்கள் முயற்சி உடையவர்களாகத் திகழவேண்டும். உங்களால் இந்த நாடு உயரவேண்டும்.

# நாம் வாழும் உலகம்

விண்ணில் நாம் காணும் நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலிய பொருட்களின் அசைவு, அமைப்பு, தன்மை ஆகியவற்றின் அறிவே விண்ணியலாகும். இதனை வானியல் என்றும் கூறுவர். நாம் வசிக்கும் பூமியும் இந்த கிரகங்களுள் ஒன்றானபடியால் - இந்தப் பூமியைப் பற்றிய புவியியல்துறை இங்குள்ள தாவரங்களைப் பற்றிய உயிரியல் ஏனைய பொருட்களைப் பற்றிய பௌதீகம், இரசாயனம் முதலியவைகளும் ஏனைய பிற துறைகளும் விண்ணியலுள் அடங்கும். இவற்றையெல்லாம் ஓரளவு நாம் அறிந்தால் தான் வானில் தெரியும் கிரகங்கள், நட்சத்திரங்களின் அசைவு, அமைப்பு, தன்மை முதலியவற்றை நன்கறியலாம். ஆகவே விண்ணியலானது ஏனைய அறிவுத்துறை களையெல்லாம் உள்ளடக்கிய ஒரு பரந்த துறையாகும்.




விண்ணியல் என்பது, மிகவும் தொன்மை வாய்ந்தது. சிறிதளவு நாகரீக வளர்ச்சி அடையாத புராதன மக்கள் கூட இரவு, பகல் மாறி மாறி வருவதையும் சூரியன், சந்திரன் உதித்து மறைவதையும் நன்குணர்ந்தனர்.

வீடுகள் கட்டியறியாத காலத்தில் திறந்த வெளிகளில் இரவில் படுத்துறங்கினார்கள், ஆதி கால மனிதர்கள். அவர்கள் தினமும் நட்சத்திரங்களையும் ஏனைய விண்பொருட்களையும் வானில் கண்டு வியந்தனர். திசைகாட்டி, மணிக்கூடு முதலியன இல்லாத அக்காலத்தில் பகலில் சூரியனைக் கொண்டும் இரவில் விண்மீன்களைக் கொண்டும் திசைகளையும் நேரத்தையும் அறிந்தனர்.

எல்லா நட்சத்திரங்களும் சூரியனைப் போலவே கிழக்கில் உதித்து மேற்கில் மறைகின்றன வென்றும் இவைகள் பல கூட்டங்களாகக் காணப்படுகின்றனவென்றும் கண்டறிந்தனர். இந்தக் கூட்டங்களின் உருவங்களைக் கொண்டு இந்த மக்கள் இவற்றுக்குப் பல்வேறு பெயர்களையும் சூட்டி இருந்தனர். கிரகணம், வால்வெள்ளி பற்றி நன்குணர்ந்திருந்தனர். பண்டைய புரானக்கதைகளிலும் பல்வேறு சமய நூல்களிலும் இவ்விண்பொருட்கள் இடம் பெற்றிருப்பதை நாம் காண்கின்றோம். நாம் சாதாரணமாகப் பார்க்கும் போது எமக்குத் தெரிவது போல ஆதிகால மக்களும் பூமி தட்டையானது என்றே நம்பினார்கள். பூமியே பேரண்டத்தின் மத்தியில் இருக்கின்றதென்றும் நட்சத்திரங்களும் ஏனைய விண்பொருட்களும் இருபத்து நான்கு மணித்தியாலத்திற்கொருமுறை பூமியை வலம் வருகின்றனவென்றும் நம்பியிருந்ததில் ஓர் ஆச்சரியமுமில்லை.

பின்னர் கிரேக்க நாட்டு அறிஞர்களான கிறிஸ்துவுக்கு முன் 4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரிஸ்ரோட்டல் கிறிஸ்துவுக்குப் பின் 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொலமி ஆகியோர் பூமி தட்டையல்ல உருண்டை வடிவானது என்று ஆராய்ச்சி மூலம் கண்டறிந்தனர்.

ஆனால், பூமி அண்டத்தின் மத்தியிலே அசையாமலிருந்ததென்றே அவர்களும் எண்ணினர். பதினான்கு நூற்றாண்டுகளாக இந்தக் கொள்கை நிலவி வந்தது.

இந்தக் கொள்கை தவறு என்பதை யார் கூறினார்கள் என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

# மிருகக்குட்டிகள் பற்றி அறிந்து கொள்வோம்

## இந்தக் குட்டிக்கு நல்ல அம்மா



உலகத்திலேயே கொரில்லா குரங்குகள் நல்ல அம்மாக்களைப் பெற்றிருக்கின்றன. தங்களுடைய குட்டிகளை மிகவும் பத்திரமாக இவை பாதுகாக்கும். மூன்று வயதுவரை தங்களுடைய குட்டிகளை கொரில்லாக்கள் உணவு கொடுத்து அன்போடு பராமரிக்கும்.

தன்னுடைய குட்டிகளோடு தாய்கள் எப்பொழுதும் இந்தக்காலப் பகுதியில் அன்பாக வாழ்ந்து கொண்டிருக்கும். குட்டிகளின் சின்னக் குரலைக்கூட இவை அடையாளம் கண்டுகொண்டு தங்களோடு அன்பாக அணைத்துக் கொள்ளும். பார்ப்பதற்கு பயங்கரத் தோற்றம் கொண்டிருந்தாலும் கொரில்லா அம்மாக்கள் நல்ல சந்தோசமான அம்மாக்கள்.

## ஏன் கங்காரு வயிற்றில் பை உள்ளது?

கங்காருவை நினைத்ததும் எங்களுக்கு உடனே நினைவில் வருவது அதனுடைய வயிற்றில் உள்ள பைதான். உலகில் வயிற்றில் பை உள்ள ஒரே ஒரு மிருகம் கங்காருதான். இது அவுஸ்ரேலியாக் கண்டத்தில் பெருமளவு காணப்படுகின்றது.

கங்காருவின் வயிற்றில் உள்ள பையில் தான் அது தன்னுடைய குட்டியை வைத்து வளர்க்கின்றது. ஏன் குட்டியை கங்காரு வயிற்றுப் பையில் இப்படி வைத்து வளர்க்கிறது தெரியுமா? கங்காருக் குட்டி பிறக்கும் போது அது எந்தளவு இருக்கின்றது என்று சொன்னால் நீங்கள் அதை நம்பவே மாட்டீர்கள். அது பிறக்கும் போது ஒரு கடலைப்பருப்பின் அளவில் தான் இருக்கிறது. எனவே தான் அது நல்ல வளர்ச்சி அடையும் வரை அம்மாவின் பைக்குள்ளேயே அம்மா கொடுக்கும் பாலைஉண்டு வளர்கிறது. கங்காரு அம்மாவும் தன்னுடைய குட்டியை மிக்க கவனத்தோடு உணவு கொடுத்து வளர்த்து வரும்.





## குட்டிகளை அடைகாக்கும் மிருகம் எது

உலகில் உள்ள மிருகங்கள் பறவைகளில் தமது குட்டிகளை அடைகாக்கின்ற ஒரே மிருகம் கடற்குதிரை ஆகும். ஆண்கடற்குதிரையின் உடலிலே சிறிய பை ஒன்று இருக்கும். இந்தப் பைக்குள் பெண்கடற்குதிரை தன்னுடைய முட்டைகளை நூற்றுக்கணக்கில் இட்டு விட்டுப் போய்விடும்.

தனது பைக்குள் அவைகளைப் பெற்றுக் கொள்ளும் ஆண்கடற் குதிரைஅவற்றை தானே அடைகாத்துக் கொள்ளும். பைக்குள் இருக்கும் முட்டைகளிலிருந்து சிறிய கடற்குதிரைகள் வெளிவரும். பின்னர் குட்டிக் கடற் குதிரைகள் தகப்பனின் பையில் இருந்து இறங்கி கடலினுள் சென்று விடும்.



# வானம்பாடியும் பூக்களும்



அழகிய வேனிற்காலம் வந்தது. ஒரு மலர்த் தோட்டத்தில் வானம்பாடி ஒன்று வந்து அமர்ந்தது. மலர்கள் பூக்கும் வேளை வந்தது. பூக்களின் இதழ்கள் விரியும் தருவாயில் இருந்தன. அந்தப் பூக்களைப் பார்த்த வானம்பாடி என் பாட்டைக் கேட்டுத்தான் இந்தப் பூக்கள் மிகவும் அழகாக மலர்கின்றன என எண்ணியது. அதனால் வானம்பாடி முன் எப்பொழுதையும் விட மிக நன்றாகப் பாடியது.

வானம்பாடியின் இன்னிசையைக் கேட்ட பூக்கள் நினைத்தன நாம் மலரும் தருவாயில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்துதான் இந்த வானம்பாடி இவ்வளவு இனிமையாகப் பாடுகின்றது போல என்று. அந்த நினைப்பின் பெருமையில் திளைத்த அந்தப் பூக்கள் முன் எப்போதையும் விட மிக அழகாக மலர்ந்தன.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

"இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :............................
கற்கும் பாடசாலை :............................
கற்கும் தரம் :............................
வீட்டு முகவரி :............................
பிறந்த திகதி :............................
ஆர்வமுள்ள துறைகள் :............................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# அண்ணனும் தங்கையும்

### பாடப்புத்தகங்களை மட்டும் படித்தால் போதுமா?

அண்ணாவும் தங்கையும் கதைக்கிறார்கள். அண்ணன் பல்கலைக் கழகத்தில் படிக்கிறார். தங்கை பாடசாலையில் ஆறாம் வகுப்பில் படிக்கிறாள். அண்ணன் பெயர் சங்கர். தங்கையின் பெயர் குழலி. ஒரு விடுமுறைநாள் தங்கை குழலி எதுவும் செய்யாமல் அமர்ந்திருப்பதை அண்ணன் சங்கர் பார்த்தார்.



**சங்கர** : குழலி, என்ன சும்மா கதிரையில் அமர்ந்திருக்கிறாயே!

**குழலி** : ஏன் அண்ணா, இன்று ஞாயிற்றுக் கிழமை தானே. விடுமுறைநாள. ஓய்வுபெறத் தானே விடுமுறை விடுகின்றனர்.

**சங்கர்** : ஓ! அப்படியா நினைத்துவிட்டாய்? விடுமுறைநாள் என்றால் சும்மா அமர்ந்திருப்பதென்று நீ நினைக்கிறாய். பழைய பள்ளிப் பாடங்களை ஏன் படிக்கக்கூடாது.

**குழலி** : அண்ணா, எல்லாப் பாடங்களையும் நான் நன்றாகப் படிக்கின்றேன். ஏன், சென்ற காலாண்டுப் பரீட்சையில்கூட திறமையாகச் சித்தியடைந்திருந்தேன். ஒவ்வொரு பாடத்திலும் நல்ல புள்ளிகள் பெற்றிருந்ததை நீங்கள் பார்த்தீர்கள், அப்படித்தானே? உங்களுக்கும் அதனால் மகிழ்ச்சி. சில பாடங்களில் முதல் மாணவியாகவும் சில பாடங்களில் இரண்டாம் மாணவியாகவும் இருந்து வருகின்றேன். ஒவ்வொருநாளும் பாடங்களை வகுப்பறையில் ஆசிரியர்கள் கற்பிக்கும்போது அமைதியாக இருந்து நன்றாகக் கவனிக்கின்றேன், பாடசாலையில் படித்த பாடங்களை அன்றிரவே நன்றாகப் படித்தும் வருகின்றேன். இன்னும் எதனைப் படிக்கச் சொல்கின்றீர்கள்?

**சங்கர்** : குழலி, பாடப் புத்தகங்களைப் படித்தால் மட்டும் போதாது. ஒவ்வொருநாளும் பாடசாலையில் படித்தவற்றை நன்றாகப் படிக்கவேண்டும். அப்படிப் பழைய பாடங்களை நன்றாகப் படித்தபிறகும் படிக்கவேண்டியது எவ்வளவோ இருக்கின்றது.

**குழலி** : அப்படி என்ன படிக்கவேண்டும் அண்ணா? பரீட்சையில் நல்ல புள்ளிகள் எடுக்கவேண்டும். அதுதானே முக்கியம். வேறு என்ன செய்யவேண்டும்? என் கடமைகளை ஒழுங்காகவே செய்து வருகின்றேன். இதைவிட என்ன செய்யவேண்டும். அதைப்பற்றிக் கூறுங்கள்.

**சங்கர்** : குழலி, பாடநூல்களை மட்டும் படித்தால் போதாது. ஏனைய நல்ல நூல்களையும் படிக்கவேண்டும். நேரத்தை வீணாக்கக்கூடாது.

**குழலி** : அண்ணா, ஏனைய நல்ல நூல்கள் என்று எதனைச் சொல்கின்றீர்கள்? அதைப் பற்றி விளக்குங்கள். நானும் அறிந்து கொள்கின்றேன்.

**சங்கர்** : உனக்கு இப்போதுதான் ஆர்வம் வந்திருக்கிறது. நன்றாக யோசி. அடுத்த விடுமுறைநாள் நேரத்தை வீணடிக்காமல் இதைப் பற்றிக் கதைப்போம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்*
*உள்ளத்தின் உள்ளக் கெடும்.*

திருக்குறள்

## நமது நோக்கு

# நடவழக்கை அவசியம்

கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் அடை மழையால், யாழ். குடாநாட்டிலும் வன்னிப் பெரு நிலப்பரப்பிலும் இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

விடாமல் பெய்துவரும் மழையால் பெருமளவு மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். நெல் விதைப்பு தாமதமாகவே ஆரம்பித்ததால் நெற் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றன.

பல இடங்களிலும் நெற்செய்கை அழிவுகளை எதிர்நோக்கியிருக்கின்றது. ஏற்கனவே அரிசியின் விலை 50 ரூபாவைத் தொட்டுநிற்கின்ற நிலையில், இந்த முறை நெற்செய்கை பாதிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் விவசாயிகள் மத்தியில் தோன்றியிருக்கின்றது.

இதனைவிட ஏனைய பயிர்ச்செய்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகள் பாதிப்பை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

அத்துடன், தொடர்ந்து பெய்துவரும் மழையால் ஏனைய அன்றாடக் கூலித் தொழிலாளர்களும் வேலையின்மையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தொடர் மழை மாரி காலத்தில் பெய்வது என்பது புதிதல்ல. ஆனால், இவ்வாறு தொடர் மழை பெய்யும் என்ற எச்சரிக்கை மட்டும் உரிய காலத்தில் மக்களுக்கு வழங்கப்படாததால் பெருமளவானோர் பாதிக்கப்படுகின்றனர்.

வானிலை அவதான நிலையம், வளிமண்டலவியல் திணைக்களம் ஆகியன உரிய காலத்தில் இதற்குரிய முன்னறிவித்தல் கொடுக்காததால் பொது மக்கள் முன்னேற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருக்கிறது.

அவ்வப்போது வெளியிடப்படும் வானிலை அறிவிப்புக்கள் - தலைகீழானவையாகக் கூட இருந்திருக்கின்றன. நவீன உலகில் மழை, புயல் குறித்து முற்கூட்டியே அறிந்துகொள்வதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்ற போதும்- மழை, புயல் வந்த பின்னர்தான் உரிய தரப்புகளால் அறிவிக்கப்படுகிறது.

இந்த நிலை மாறினால்தான் பல்வேறு தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கும் பொதுமக்கள் - காலநிலை சீர்கேட்டிலிருந்து ஓரளவுக்காவது தமக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ள முடியும்.

இதேவேளை, தொடர்ந்து பெய்துவரும் மழையினால் தாழ் நிலப்பகுதிகளிலும், தோட்டங்கள், வயல்களிலும் வெள்ளம் நிரம்பிக் காணப்படுகிறது. இதில் துயரம் என்னவெனில் - அநேகமான இடம்பெயர்ந்தோர் நலன் புரிநிலையங்கள் தாழ்நிலப் பகுதிகளிலேயே அமைந்திருப்பதுதான்.

இடம்பெயர்ந்த மக்கள் மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கியிருக்கின்றனர். இவர்களுக்கான உலர் உணவு விநியோகம் கூட சீரற்றதாகவே இருக்கிறது.

இதனால், இடம்பெயர்ந்த மக்கள் மேலும் மேலும் பிரச்சினைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்து வருகின்றனர். ஆக மொத்தத்தில் இந்தக் காலநிலை சீர்கேடு ஒட்டுமொத்த மக்களையும் பாதித்து வருகிறது.


இதில் வெகுவாகப் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு அரச அதிகாரிகள் உரிய நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். தென்பகுதியில் இப்படிப்பட்ட இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் உடனடியாக அரசாங்கம் நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கும்.

ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இப்படிப்பட்ட இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட முன்னர் யாரும் எச்சரிக்கை விடுவதும் இல்லை - இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்ட சமயங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதும் இல்லை.

இயற்கையின் சீற்றம் இன்னும் ஓயாத நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு அதிகாரிகள் இப்போதே நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதைவிட நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொது அமைப்புக்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதும் அவசியம்.

## நாடும் நடப்பும்




# கூட்டுறவு மொத்த விற்பனவு நிலைய தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் தலைவரான உபாலி குணரத்னவை பதவியில் இருந்து நீக்குவதற்கான கடிதத்தை நேற்று முன்தினம் அனுப்பியுள்ளதாக வியாபார, வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சரான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இவரை மீண்டும் பதவியில் தொடர்ந்து வைத்துக் கொண்டால், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கும், நுகர்வோருக்கும் ஏற்படும் பாதிப்பைத் தடுக்கும் நோக்கிலே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் கூறினார்.

தனியார் வியாபார நிலையங்களிலும் பார்க்க, ஐந்து ஆறு ரூபா குறைவாக, சீனியின் விலையை 30 ரூபாவுக்கு வழங்க திறைசேரி அனுமதி வழங்கியிருந்தும், இந்தத் திட்டத்தை இடைநிறுத்தி தனியார் விற்பனை நிலையங்கள் இலாபத்தை ஈட்டுவதற்கு இவர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்குச் சொந்தமான 18 லொறிகள் திருத்தப்பட்டிருந்தும் அதைப் பாவனைக்கு விடாமல் இருந்தமை, இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை குறைந்த விலைக்கு விற்காமை போன்ற குற்றச் சாட்டுக்களே இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

புதிய கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் தலைவராக அமைச்சின் செயலாளர் எஸ்.விரிதமுல்ல நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வரணி பொது நூலகத்துக்கு வசதிகள் செய்துதரக் கோரிக்கை

வரணி பொது நூலகத்துக்கு அடிப்படைவசதிகளை ஏற்படுத்தித்தருமாறு பொது அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களாலும், இடப்பெயர்வு காரணமாகப் பாதிக்கப்பட்ட இந்த நூலகத்தில் தளபாடங்கள் பற்றாக்குறை, இடவசதியின்மை என்பன காணப்படுகின்றன. இதைவிட பயனுள்ள புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் என்பன இல்லாமையும் காணப்படுகிறது.

ஆகவே, இந்த நூலகத்துக்கு வேண்டிய சகல வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (17)

## பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்

யாழ்.குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் ஒன்றை, உலக உணவு ஸ்தாபனம் அமுல்படுத்த முன்வந்துள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால், யாழ்.குடா நாட்டுப் பாடசாலை மாணவர்களில் 55 வீதமானோர் போஷாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையைக் கவனத்தில் கொண்டே பாடசாலை மாணவர்களுக்கு இலவச சத்துணவு வழங்கும் விசேட திட்டத்தை உலக உணவு ஸ்தாபனம் அமுல்படுத்தப்படவுள்ளது.(17)

# கடல் கொந்தளிப்புக் காரணமாக நெடுந்தீவு போக்குவரத்து பாதிப்பு

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான பயணிகள் படகுச்சேவை நேற்று கடும் கடற்கொந்தளிப்பு காரணமாக நிறுத்தப்பட்டமையால், நெடுந்தீவு மக்களின் அன்றாட நடவடிக்கைகளில் பல, நெருக்கடி நிலை உருவாகியது.

வைத்திய தேவைகள், வர்த்தக நோக்கங்கள், தேவைகளுக்கென யாழ்.நகர் மற்றும் வேறு இடங்களுக்கு சென்றுவரும் மக்களின் நாளாந்த தேவைகள் பல இயற்கையின் சீற்றத்தால் தடைப்பட்டது.

இதேவேளை வெளியிடங்களில் இருந்து நெடுந்தீவுக்கு சென்று பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அரச, திணைக்கள அதிகாரிகள் தங்கள் சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பும் நடைமுறை பாதிக்கப்பட்டுள்ளதுடன், நாளாந்த தேவை கருதி யாழ்.நகர் வந்த சாதாரண மக்கள், அரச அலுவலர்கள் மீளவும் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

காலநிலை சீரற்ற நிலைமை நாளையும் தொடருமாயின், நெடுந்தீவுக்கான போக்குவரத்து இடம்பெறாதென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (113)

## மட்டுவிலில் திருத்தப்பட்ட வீதிகள் ஒருவாரத்துக்குள் சேதமடைகிறது

(மட்டுவில்)

மட்டுவில் அம்மன் கோவில் முதல் கனகம்புளியடிப் பகுதி வரையான வீதியில் உள்ள குன்று குழிகளும், மதகுத் தடுப்புச் சுவரும் அண்மையில் திருத்தம் செய்யப்பட்டது. இந்த வீதியில் நிரவப்பட்ட குழிகள் யாவும் ஒரு வாரத்துக்குள்ளாகவே மீண்டும் வெளிப்பட ஆரம்பித்துவிட்டன.

அத்துடன், மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள மதகின் தடுப்புச் சுவர் திருத்தமும் மிகவும் வேதனைக்குரியதாகவுள்ளது. முன்னர் உடைந்திருந்து சுவர்த்துண்டுகளை அப்படியே நிமிர்த்தி சீமெந்தால் ஒட்டுப்போட்டுப் பூசியுள்ளனர். இதுபற்றி வினவிய ஒருவருக்கு வருட முடிவில் செய்யப்படும் வேலைகள் அப்படித்தான் என்ற தொனியில் ஒப்பந்த வேலைக்காரரால் பதில் அளிக்கப்பட்டதாம்.

செய்யப்படும் எந்தவொரு திருத்தவேலையும், நீண்டகாலப் பாவனைக்குகந்தவையாக இருக்கவேண்டுமே தவிர பணத்தைச் சுருட்டும் தன்மை கொண்டவையாக அமையக்கூடாதென இந்தப் பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (24)

## மாவிலித் துறைமுகப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது

நெடுந்தீவு மாவிலித்துறைப் பகுதி கடற்தொழிலாளர்கள் சிலரது கண்ணியமற்ற வேலையால் அசுத்தமடையும் செயற்பாடு, கடந்த சில வாரகாலமாக தொடர்வதால் துறைமுகமூடாக நாளாந்தம் பயணிக்கும் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது வாடைக்காற்றுக் காலம் ஆரம்பித்திருப்பதால், ஒதுக்காக அமைந்துள்ள துறைமுகப்பகுதியில் சிலரது படகுகள் பாதுகாப்பாக விடப்படவேண்டும் என்பதற்காக, கடற்தொழில் முடிந்ததும் துறைமுகப் பகுதியிலே தரித்து விடப்பட்டு, பழுதடைந்த மீன்கள், பாவனைக்குதவாத மீன்கள் போன்றன துறைமுக கடலிலும், கரையிலும் வீசப்படுவதால், துறைமுகம் எங்கும் பெரும் துர்நாற்றம் வீசி, சூழலை மாசுபடுத்துமளவுக்கு நிலைமை மோசமடைந்து செல்கின்றது.

பொறுப்பானவர்கள் பல தடவைகள் இதுதொடர்பாக எடுத்துக் கூறியும், பொதுமக்களது நலன் கருத்தில் கொள்ளப்படாமல், தொடர்ந்தும் இந்தச் செயற்பாடு இடம்பெறுவதால் துறைமுகம் ஊடாகப் பயணிப்போரும், துறைமுகத்தைச் சூழவுள்ளோரும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# மேஜர் ஜீவாவின் நினைவுநாள் நிகழ்வுகள் புலிகளின் குரல் அமலன் அரங்கில் நடைபெற்றது

(கிளிநொச்சி)

1997 ஆம் ஆண்டு திருகோணமலைக் கடற்பரப்பில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட புலிகளின் குரல் நிறுவனத்தின் ஒளிப்பதிவாளரும், ஒலிபரப்பாளருமான மேஜர் ஜீவாவின் நினைவுக்கல் - கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - குருநகரிலிருந்து அவரது திருவுருவப்படம் கடந்த திங்கட்கிழமை புலிகளின் குரல் நிறுவனத்துக்கு எடுத்து வரப்பட்டு, புலிகளின் குரல் நிறுவன அமலன் அரங்கில் வீர வணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், கிளிநொச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஆகியோர் ஏற்றினர்.

மேஜர் ஜீவாவின் திருவுவருப் படத்துக்கு ஈகச்சுடரை அவரது சகோதரன் இசையழகன் ஏற்றி வைக்க, அவரது தாயார் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் மேஜர் ஜீவாவின் திருவுருவப் படத்துகது மலரஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வு புலிகளின் குரல் நிறுவன நிர்வாக இணைப்பாளர் இராஜேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வீரவணக்க நிகழ்வின் நினைவுரையை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம், புலிகளின் குரல் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஆதிலட்சுமி சிவகுமார், புலிகளின் குரல் மூத்த அறிவிப்பாளர் ரட்ணா ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் வீரவணக்க உரையை கிளிநொச்சி அரசியற் துறைப் பொறுப்பாளர் காண்டீபன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து திருவுருவப்படம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பூரண இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல் திரை நீக்கம்செய்து வைக்கப்பட்டது.

## உழவுக்கூலியும் உள்ளீடு வழங்கலும்

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன், போரூட் நிறுவன நிதியுதவியுடன் வட்டக்கச்சி, மாவடி கிராம விவசாயிகளுக்கு காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு, ஒன்றரை ஏக்கர் நிலத்துக்கான உழவு செய் வதற்கான கூலியும், உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தில் வழங்கப்பட்டது. (9)

## அடிக்கல் நாட்டுவிழா

வவுனியா - சேமமடு படிவம் II இல் முன்பள்ளி கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் நிலையில், புதிய முன்பள்ளி ஒன்றை அமைக்கும் நோக்கில், வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த நிகழ்வு சேமமடு படிவம் II பாடசாலை அதிபர் கந்தவநேசன தலைமையில் நடைபெற்றது.




# காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிக்குளம், அக்கராயன் குளத்தின் கீழ் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வு வன்னேரிக்குளத்தில் காலை 11.00 மணிக்கும், அக்கராயன் குளத்தில் மாலை 2.30 மணிக்கும் நடைபெற்றது. இதில் கரைச்சி பிரதேச செயலர், விவசாய போதனாசிரியர், கமநல பெரும்போக உத்தியோகத்தர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதி, அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிராம சேவையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் அந்தக் குளத்தின் கீழுள்ள திட்டக் குழுக்கள் தலைமை தாங்கின.

இந்த நிகழ்வில் நெற்செய்கை மேற்கொள்ளலும், அதனைப் பராமரித்து, அறுவடை செய்து விற்பனை செய்யும் வரையான விளக்கமும், நோய்த்தாக்கம் பற்றியும், அதற்கான நடவடிக்கை தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

# இரணைமடுக் குளத்தில் குளிக்க சென்ற இளைஞர் மூச்சுத்திணறி உயிரிழப்பு!

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்தினுள் குளிப்பதற்கென நண்பியுடன் சென்ற இளைஞன் குளத்தின் நீர் வரும் வாய்க்காலில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை நண்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி - ஆனந்தபுரத்தைச் சேர்ந்த மகாலிங்கம் விஜயதாஸ் (வயது 20) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

நண்பியுடன் குளத்திலிருந்து பிரதான நீர் வரும் வாய்க்காலக்குள் நீந்த முற்பட்டவேளை, அவரால் தொடர்ந்து நீந்தமுடியாத சூழ்நிலையில் தண்ணீரில் தத்தளித்து மூச்சுத்திணறி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நீருக்குள் மூழ்கிய இந்த நபரை அயலவர்கள் உடனடியாக சுழியோடி மீட்டெடுத்து பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். மேலதிக விசாரணைகள் தமிழீழ காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினால் முழங்காவிலில் 2 ஆம் கட்ட சமூகநல பயிற்சி

(கிளிநொச்சி)

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சுகாதாரத் திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படும் சமூகநலப் பயிற்சி நெறியில் முதற்கட்டம் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2004 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக 2 ஆம் கட்ட சமூகநலப் பயிற்சி நெறி பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டம் - முழங்காவில் வலயத்தின் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும் கலந்துகொண்டனர்.

மேலும், இந்தப் பயிற்சி நெறியில் முதலுதவி, உடல் அமைப்பு தொழிற்பாடு, முதலுதவிச் செயன்முறைகள், தொற்றுநோய்கள், சுகாதார நடைமுறைகள் தொடர்பான விரிவுரைகள் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர், தலைவர், தொண்டர்கள் ஆகியோராலும், சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சி நெறியில் முதலுதவி தொடர்பான கைநூல், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவால் தயாரிக்கப்பட்டு பயிற்சியில் பங்குபற்றிய ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சியை நிறைவுசெய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும், அதற்கான மருந்துகள், உபகரணங்களும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவால் வழங்கப்பட்டன.

அத்துடன் ஒவ்வொரு பாடசாலைகளிலும் பயிற்சிநெறியை நிறைவுசெய்த மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் முதலுதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டதுடன், பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ், சின்னங்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


# பூநகரி வெற்றிச்சமர் நினைவுநாளை சிறப்பாகக் கொண்டாட நடவடிக்கை

பூநகரி வெற்றிச்சமர் நடவடிக்கையின் 11 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் எதிர்வரும் 13 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளால் 1993 ஆம் ஆண்டு பூநகரி - நாகதேவன் துறை, ஞானிமடம் கூட்டுப்படைத் தளம் ஒப்பரேசன் தவளை நடவடிக்கை மூலம் அழிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் பெருந்தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பெருமளவு நவீன யுத்த தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன.

இந்த நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (122)



கிளிநொச்சி - தர்மபுரம் வைத்தியசாலையில் இயங்கிவரும் ஆண்களுக்கான நோயாளர் விடுதியைப் படத்தில் காணலாம். படம் - இராமநாதபுரம் செய்தியாளர்

# பைந்தமிழ் சனசமூக நிலையத்தின் ஓராண்டு நிறைவு விழா நிகழ்வு!

ஆனைவிழுந்தான் பைந்தமிழ் சனசமூக நிலையத்தின் ஓராண்டு நிறைவு விழா கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு சனசமூக நிலையத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியை அக்கராயன் பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்புரைகளை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ், அக்கராயன் பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர் கரிகாலன், கிராமசேவையாளர் சபாரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் - சனசமூக நிலையத்துக்கு அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் ஒரு தொகை நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

## கழகங்களுக்கிடையிலான போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் கழகங்களுக்கிடையிலான மாவீரர் வெற்றிக்கேடய சுற்றுப்போட்டிகள் நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இந்தப் போட்டிகளை நடத்துவதற்கான விண்ணப்பங்கள் இந்தமாதம் 8 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்ட விளையாட்டுத் துறையினரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

## கட்டைக்காடு கடற்கரைவீதி புனரமைக்கப்படாத நிலையில்

(கட்டைக்காடு)

நிகொட் நிறுவன நிதி உதவியுடன் மாமுனை - கட்டைக்காடு கடற்கரை வீதி, வெற்றிலைக்கேணி சந்தியிலிருந்து சுமார் 1 கிலோமீற்றர் நீளமான வீதி இதுவரை திருத்தப்படாத நிலையில் காணப்படுகிறது.

மிகவும் தாழ்வான இந்த வீதி, மழைகாலம் ஆரம்பித்துள்ள இந்த வேளை முழங்கால் அளவு மழை நீர் தேங்கி நிற்கிறது. இந்த வீதியால் போக்குவரத்துச் செய்யும் பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள், வாகனங்கள் வெகு சிரமத்தின் மத்தியிலேயே போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். (21)

## மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பரந்தனில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல் பரந்தன் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல பரந்தன் பிரதேச பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இதில் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் நிகழ்த்தினார்.



வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் பழைய மாணவன் ஒருவரால் வழங்கப்பட்ட கணினியை, மாணவனின் தந்தை பாடசாலை அதிபர் சி.சந்திரசேகரத்திடம் கையளிப்பதை படத்தில் காணலாம். *படம் - வட்டக்கச்சி செய்தியாளர்*

# கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 378 வீதிகள் புனரமைக்கவேண்டிய நிலையில்

கிளிநொச்சி மாவட்டத்தில் 378 வீதிகள் புனரமைப்பு செய்வதற்காக வீதி அபிவிருத்தி சபையிடம் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் 1 கிலோமீற்றர் தூரமான வீதி நிரந்தரமாகத் தார் மூலம் செப்பனிடப்பட்டுள்ளது. 4 கிலோமீற்றர் தூரமான வீதி கிரவல் மண் போட்டு தார் ஊற்றித் தற்காலிகமாகச் செப்பனிடப்பட்டுள்ளது. ஏனைய வீதிகள் கிரவல் மண் மூலம் செப்பனிடப்பட்டும், செப்பனிடப்படாமலும் காணபபடுகின்றன.

இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என- கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

**ராஜா** யாழ்ப்பாணம்.

கடைசிவாரம் ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

**7/G ரெயின்போ காலனி**

இது ஒரு உண்மைக் கதை

11.11.2004 முதல்

**அட்டகாசம்**

(C-3319)

பு.நே 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

**நாகம்ஸ்** சுன்னாகம்

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

**அரசாட்சி**



அடுத்த வெளியீடு

**சத்திரபதி**

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

**சிறு விளம்பரம்**

**காணாமற்போய்விட்டது**

22.10.2004 இல் ரவி என்பவருடைய ஏறத்தாழ 170 புகைப்படங்களும் (5றோல்), பிரதிகளும் ஸ்ரான்லி வீதி – ஆரியகுளம் சந்தி, ரயில்வே கடவைக்கு அண்மித்தாகக் காணாமற்போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுகூர்ந்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். பழனி பான்சி, 20, பஸ் நிலையம். யாழ்ப்பாணம். T.P. 077 6292682 (977)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.

**TYCUS**

(சி-3319)

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.30, 6.30, 8.30 (பு.நே)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

ராஜ்கிரன் நடித்த

**கொஞ்சிப்பேசலாம்**

(ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

**DARE DRAVIN**

(சி-2723)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45, (பு.நே)


# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

# சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் – 2005

01. கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி : 2004.11.22 நண்பகல் 12.00 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி : 2004.11.23 நண்பகல் 12.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 2004.11.23 பிற்பகல் 2.00 மணிக்கு
04. கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றுக்குரிய (பெறுமதி) சேர்க்கப்பட்ட வரி 15% சேர்த்து அறவிடப்படும்.
05. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.
06. கேள்விப்படிவங்களில் ஒரு பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுவதுடன், மறுபிரதியினை இந்த அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத்தபாலிலோ சேர்ப்பித்தல் வேண்டும்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விபரம் | மாதாந்த வாடகை | கேள்விப் பத்திரப்பணம் | கேள்வி வைப்புக்கள் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| **01. மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1. மானிப்பாய் பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 500/- | 2000/- | 375000.00 |
| 2. மானி.பொதுச்சந்தை மாட்டிறைச்சிக கடை | 400/- | 300/- | 2000/- | 210000.00 |
| 3. மானி.பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300/- | 300/- | 1500/- | 40000.00 |
| 4. மானி.பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | - | 300/- | 1500/- | 20000.00 |
| **02. மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1. காக்கைதீவுச் சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 11000.00 |
| 2. நவாலி பிரசாத் சந்தை (து.ச.வ.தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 70000.00 |
| 3. சாவற்கட்டு சந்தை (து.ச.வ.தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 50000.00 |
| 4. ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | - | 300/- | 2000/- | 190000.00 |
| 5. ஆனைக்கோட்டைச் சந்தி ஆட்டிறைச்சிக்கடை | - | 300/- | 1500/- | 30000.00 |
| 6. நவாலிபிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 400/- | 300/- | 1500/- | 61000.00 |
| 7. நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கிடை | 300/- | 300/- | 1500/- | 24000.00 |
| **03. பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1. பண். பொதுச்சந்தை | - | 300/- | 2000/- | 250000.00 |
| 2. பண். பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 300/- | 300/- | 1500/- | 40000.00 |
| **4. பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1. மாதகல் பொதுச்சந்தை (து.ச.வ தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 25000.00 |
| 2. இளவாலை பொதுச்சந்தை (து.ச.வ. தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 60000.00 |
| 3. மாசியப்பிட்டி சந்தை (து.ச.வ.தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 630000.00 |
| 4. மாதகல் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 200/- | 300/- | 1500/- | 10000.00 |
| 5. இளவாலைச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | - | 300/- | 1500/- | 45000.00 |
| 6. மாசியப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250/- | 300/- | 1500/- | 30000.00 |
| 7. பெரியவிளான் சந்தை (து.ச.வ.தரிப்பிடம் உட்பட) | - | 300/- | 1500/- | 5000.00 |

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச்செயலகம்,
மானிப்பாய்.

(பிரான்சிஸ் விக்டர்)
செயலாளர்.

(C/3327)

2004.11.04

# ‘பிரமோஸ்’ ஏவுகணை வெற்றிகரமாக சோதனை




அதி நவீன சுப்பர் சொனிக் ஏவுகணையான ‘பிரமோஸ்’ கடந்த வியாழன் ஒரிசா மாநிலம் சந்திப்பூர் கடற்கரை அருகே கப்பலில் இருந்து ஏவி வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.

இந்திய, ரஷ்ய கூட்டுத்தயாரிப்பில் உருவானது ‘பிரமோஸ்’ அதி நவீன ‘சுப்பர் சொனிக்’ ஏவுகணை. 9 மீற்றர் நீளமுள்ள இந்த ஏவுகணை 290 கிலோமீற்றர் தூரம் வரை ஒலியைவிட இரண்டு மடங்கு வேகத்தில் சென்று தாக்கக்கூடியது.

ஒரிசா மாநிலம் சந்திப்பூ கடற்கரை அருகே ஐ.என்.எஸ்.ரஜபுத் கப்பலில் இருந்து ‘பிரமோஸ்’ ஏவுகணை வெற்றிகரமாக ஏவி சோதித்துப் பார்க்கப்பட்டது. இதற்கு முன்பாக கடந்த ஆண்டு நவம்பர் 23ம் திகதி இது சோதித்துப் பார்க்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு இந்தியர் ஒருவர் தெரிவாகினார்




(வாஷிங்டன்)

அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில் 33 வயது இந்தியரான பாபி ஜிந்தால் வெற்றி பெற்றிருக்கிறார். 50 ஆண்டுகளில் இப்போதுதான் முதல் முறையாக ஒரு இந்தியர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியிருக்கிறார்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பாபி ஜிந்தால் - கடந்த ஆண்டு லூசியானா மாநில ஆளுநர் தேர்தலிற் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். அவர் இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். இதில் அவர் 78 சதவீத வாக்குகள் பெற்று அதாவது 2 லட்சத்து 13 ஆயிரத்து 610 வாக்குகள் பெற்று வெற்றிகண்டார்.

இவரை எதிர்த்து 5பேர் போட்டியிட்டனர். அவர்களில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ராய் ஆர்ம்ஸ்ட்ராங்க்குக்கு 7 சதவீத வாக்குகள் அதாவது 18 ஆயிரத்து 513 வாக்குகள் மட்டுமே கிடைத்தது.

# பலஸ்தீன அரபாத்தின் உயிர் ஊசலாடுகின்றது




பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள பேர்சி மருத்துவமனையில் கடந்த எட்டு நாட்களாகச் சிகிச்சை பெற்றுவரும் பலஸ்தீன ஜனாதிபதி யாசீர் அரபாத்தினது உயிர் ஊசலாடிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே, பலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத் இறந்துவிட்டதாக செய்திகள் வெளியானபோது, அதனை மறுத்துள்ள பிரான்சிற்கான பலஸ்தீனத் தூதுவர் சியிலா சாகித் - அரபாத்தினது உயிர் பிரிந்துவிடவில்லை என்றும் அவரது மூளை செயலிழந்து விடவில்லை என்றும் தெரிவித்தார்.

ஆனால், அரபாத்தினது மூளை செயலிழந்துவிட்டதாகவும், அவரது மூளையை செயற்கைமுறையில் செயற்பட வைத்துள்ளதாகவும், செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

**உலக நோக்கு**

யாசீர் அரபாத் தற்போதுள்ள ஹோமா நிலையில் இருந்து சில சமயங்களில் சுயநினைவிற்குத் திரும்பக்கூடும் எனத் தெரிவித்துள்ள பேர்சி மருத்துவமனை வைத்தியர்கள், யாசீர் அரபாத்தினுடைய வயது மற்றும் தற்போதைய உடல்நிலைகளின் அடிப்படையில் அரபாத் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவாரா என்பது பற்றித் திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அரபாத் படிப்படியாக மரணத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக பாரிஸில் உள்ள பி.பி.சி செய்தியாளர் கரோலின் வையாட் தெரிவித்தார்.

இதேசமயம், அரபாத் குணமடைந்து அவரது தலைமையகமான றமலாவிற்கு மீண்டும் திரும்புவதற்கு அனுமதிப்பதாகத் தெரிவித்துள்ள இஸ்ரேலியப் பிரதமர் ஏரியில் ஷரோன், அரபாத் இறந்தால் அவரது உடலை ஜெருசலேமின் கிழக்குப் பகுதியில் உள்ள முஸ்லிம்களின் புனித பூமியில் அடக்கம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார்.

அரபாத்தின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதைத் தொடர்ந்து பலஸ்தீனப் பிரதமர் அகமட் குவாறி, யாசீர் அரபாத்தின் பொறுப்புக்கள் சிலவற்றை ஏற்றுக்கொண்டுள்ளார்.




யாழ்ப்பாணத்தின் சமகாலம் நிழலாக அரங்கில்...!

அம்பலம் சஞ்சிகைக்காக..... கு.பிரபாகரனின்.....

**3 நாடகங்கள்**

07.11.2004 ஞாயிறு

- பண்பூடும் கூவடுகள்
- கபாடம் திறபின்
- மேன்மக்கள்

யாழ் பல்கலை. கைலாசபதி கலையரங்கு

காட்சிகள் மு.ப 9.30 பி.ப 12.30 பி.ப 3.30

நுழைவு - 100/= 50/= 20/=



விளம்பர அனுசரணை – நமது ஈழநாடு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விபத்துக்களால் இந்தவருடம் ஐம்பத்திரண்டு பேர் உயிரிழப்பு!

## செயலக கூட்டத்தில் அரச அதிபர்



(யாழ்ப்பாணம்)

கடந்த வருடங்களில் போரினால்தான் யாழ். குடாநாட்டில் மனித உயிர் இழப்புக்கள் அதிகம் ஏற்பட்டன. ஆனால் இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் விபத்துக்களால் 52 மனித உயிர் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான உயிரிழப்புக்களை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு எடுக்கவேண்டிய நடைமுறைகள் தொடர்பாக யாழ்.செயலகத்தில் நடந்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

தற்போது பெருகிவரும் விபத்துக்கள் தொடர்பாகவும் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்கள் தொடர்பாகவும் ஜனாதிபதி சந்திரிகா, விசேட கவனம் செலுத்தியுள்ளார். நாம் கடந்த கூட்டத்தின்போது எடுத்த தீர்மானங்கள் பூரணமாக நிறைவேற்றப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் யாழ்.நகரப் பகுதியில் உள்ள ஒரு வழிப்பாதைகளின் ஊடாக, எதிராகச் செல்கின்ற துவிச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுப்பது, வீதியோரங்களில் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களை தடைசெய்வது. யாழ்.நகரப்பகுதியில் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்த ஓர் இடத்தை ஒழுங்குபடுத்துவது.

வாகனங்களை மது போதையில் செலுத்துபவர்கள் மீதும் போட்டிக்கு வாகனங்களை ஓட்டுபவர்கள் மீதும் இறுக்கமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சாரதிகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் வீதி ஒழுங்குகள் தொடர்பாக கற்பிக்க வேண்டும்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் ஓட்டோக்கள் இரண்டு பக்க கதவுகள் அடைக்கப்பட்டதாகவும் அனுமதி பெற்ற ஓட்டோக்களாகவும் இருக்க வேண்டும். வீதிக் குறியீடுகள் மிகவும் சிறப்பான முறையில் பேணப்படுவதுடன் வாகன வேகத்தை கணித்து வேகக் கட்டுப்பாட்டை மீறுபவர் மீது நடவடிக்கை எடுப்பது ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

# மாவீரர் பெற்றோருக்கு அரசியற்துறை அறிவிப்பு

மாவீரர் நாள் நிகழ்வின்போது வெளிமாவட்டங்களில் உள்ள மாவீரர்களின் கல்லறைகள், நடுகற்களுக்கு நினைவுச்சுடர் ஏற்றுவதற்காக மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்களைத் தொடர்புகொள்ளும்படி யாழ்.மாவட்ட அரசியற்துறை அறிவித்துள்ளது.

இது குறித்து அரசியற்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

எமது தேசத்தின் விடிவிற்காக களமாடி வீரகாவியமாகி கல்லறைகளிலும், நடுகற்களிலும் உறங்கிக்கொண்டிருக்கும் எங்கள் பிள்ளைகளான எம்மினிய மாவீரர்களை நினைவுகூரும் நன்நாளாகிய 2004 ஆம் ஆண்டின் மாவீரர் நாள் எம்மை அண்மித்துவிட்டது.

கார்த்திகை 27 எம் தேசத்தின் துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் நினைவுச் சுடரேற்றுவதற்குச் செல்லும் பெற்றோர்களுக்கான ஏற்பாடுகள் எம்மால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

எனவே, எம் பாசத்திற்குரிய பெற்றோர்களே தங்கள் மாவீரச் செல்வங்களின் கல்லறைகள், நினைவுக் கற்கள் யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் துயிலும் இல்லங்கள் இருப்பின் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தங்களுக்கு அருகிலுள்ள எமது பிரதேச அல்லது கோட்ட அரசியற்துறைச் செயலகங்களில் தொடர்புகொண்டு தங்களின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெஹிவளையில் கொல்லப்பட்டவர் இராணுவத்தின் முக்கிய உளவாளி!

கொழும்பு - தெஹிவளையில் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் புளொட் உறுப்பினரான வேலாயுதம் தயாளகுமார் முக்கியமான இராணுவ உளவாளி என தகவல் வெளியாகியுள்ளது.

இராணுவ புலனாய்வு பிரிவின் முக்கியஸ்தரான - கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட புளொட் மோகன் எனப்படும் கந்தையா யோகராஜாவிற்கு அடுத்த இடத்தில் இவர் செயற்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் வன்னிப் பிரதேசத்திலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஊடுருவல் தாக்குதல் சம்பவங்களுக்கு உரிய தகவல்கள் இவரால் வழங்கப்பட்டதாக தெரியவருகிறது.

இவர் குறிப்பிட்ட பகுதிகளுக்கு சாதாரண நபராகவே சென்று விபரங்களைச் சேகரித்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

கொழும்பிலும் இவர் புலனாய்வுத் தகவல்களை சேகரித்து வந்ததாகவும் கூறப்படுகிறது. இவரது தந்தையாரான கே.வேலாயுதம் என்பவர் தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பு அலுவலகத்தில் வீ.ஆனந்தசங்கரியின் செயலாளராக பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி சந்திரிகா சோனியாவுடன் பேச்சு!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியை நேற்றுச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்திய காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் தற்பொழுது தடைப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகளை மீள முன்னெடுத்துச் செல்வது உட்பட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

# ஆட்சேபனைகளை ராஜபக்ஷ தானே சமர்ப்பிக்க வேண்டும்!

## யாழ்.மேல் நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குரிய ஆட்சேபனைகளை சிறைச்சாலையிலிருந்து தானே சத்தியக் கடதாசி வடிவில் தயாரித்து அடுத்த தவணை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பாக யாழ்ப்பாணம மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் காணாமற்போயிருந்த சே.நந்தகுமாரன், ஆ.ஜதீஸ்குமார், நா.செல்வரத்தினம், சு.சுதாகர், லோ.சேரன், ப.சந்திரசேகரன் ஆகியோர் தொடர்பான வழக்குகளில் எதிர்மனுதாரர்களில் ஒருவரான லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ நேற்று யாழ்.நீதிமன்றத்தில் நீதிபதி கே.பி. எஸ்.வரதராஜா முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

ராஜபக்ஷ சார்பில் நேற்றும் சட்டத்தரணி எவரும் நீதிமன்றத்தில ஆஜராகாத காரணத்தினாலும் இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களுக்கு ஒரு சட்டத்தரணியும் நியமிக்க வேண்டிய கடப்பாடு இந்த நீதிமன்றுக்கு இல்லாதபோதிலும், நீதிமன்றம் அவருக்கு ஒரு சட்டத்தரணியை ஒழுங்கு செய்து கொடுக்க தன்னாலான முயற்சியை எடுத்தபோதும் அது முடியாத காரணத்தினால் தொடர்ந்தும் இந்த வழக்கை ஒத்திவைக்க முடியாது.

எனவே - ராஜபக்ஷ தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குரிய ஆட்சேபனைகளை தானே சத்தியக் கடதாசி வடிவில் தயாரித்து அடுத்த தவணை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கான காகிதாதி உதவிகளை வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரிகள் அவருக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று நீதிபதி கட்டளையிட்டு மேற்படி வழக்கை டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி ஒத்திவைத்தார்.

# திறந்த பல்கலைக்கழகத்தின் பரீட்சை நிலையம் மாற்றம்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா இறுதிப்பரீட்சைக்கான யாழ்.பிராந்தியப் பரீட்சை நிலையம் இடம்மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்தப் பரீட்சை இன்று காலை 9.30 மணிக்கு செங்குந்தா இந்துக் கல்லூரியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்தப் பரீட்சைகள் இன்று காலை 9.30 மணிக்கு கொக்குவிலில் உள்ள திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய அலுவலகத்திலும், திருநெல்வேலி உயர் தொழில் நுட்பக்கல்லூரியிலும் இடம்பெறும் என யாழ்.பிராந்திய திறந்த பல்கலைக்கழகப் பணிப்பாளர் ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

373 முதல் 447 வரையிலான அனுமதி இலக்கங்களைக் கொண்டவர்கள் உயர் தொழிநுட்பக் கல்லூரியில் உள்ள பரீட்சை நிலையத்திலும், 448 முதல் 522 வரையிலான அனுமதி இலக்கங்களைக் கொண்டவர்கள் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய அலுவலகததில் உள்ள பரீட்சை நிலையத்திலும் பரீட்சைகளிற்குத் தோற்றுமாறு யாழ்.பிராந்திய நிலையப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## அடுத்த...

வாகியுள்ளது. அதேவேளை, கடந்த மாதத்தில் 304.9 மி.மீ மழை பெய்துள்ளது. இவற்றுடன் சேர்த்து இந்த வருடத்தில் மொத்தம் 1066 மி.மீ மழை வீழ்ச்சி பதிவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு முதல் தொடர்ந்து பெய்து வரும் மழையால் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. அத்துடன் கடும் காற்றால் மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

இதேவேளை, வன்னிப் பகுதியிலும் கடும் மழை பொழிவால் பல இடங்களிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் பல இடங்களில் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால், போக்குவரத்துத் தடைப்பட்டிருக்கிறது.

வன்னியில் பல்வேறு பகுதிகளிலும் கடும் மழையினால் பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பதாகவும், பிரதான குளங்களில் நீர் மட்டம் உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
யாழ்ப்பாண மாவட்டத்திற்கான உப்பு விற்பனை
அறிவித்தல்
ஆனையிறவு உப்பு விநியோகம்
யாழ்ப்பாண மாவட்டத்திற்கான ஏக விநியோகஸ்தர்
யாழ்ப்பாண மாவட்ட வணிகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்.
